Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ. 1-50

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆவணி 22 திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 12 (07 – 09 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 243

★ துருப்பிடிக்காத இரும்பினாலான அச்சு
★ கல்சியம் கூடிய நீரில் நீண்டகாலம் பாவிப்பதற்கென விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட ஜேர்மன் வாட்டசிம்
★ பித்தளையினாலான பம்ப்
★ பம்பின் செயற்பாட்டிற்கு ஒரு வருட உத்தரவாதம்
சொலிட் பம்ப்

★ தோமோஸ்ரற் உடன் கூடிய
crompton Greves
★ மோட்டாரிற்கு இணைக்கப்பட்ட
சொலிட் பம்புகளையே வாங்குங்கள்

# இந்திய சமாதானப்படை மீது புலிகளுக்குச் சந்தேகமாம்!

## சமூக விரோத சக்திகளுக்கு துணைபோவதாகக் குற்றச்சாட்டு

— எம். பேரின்பநாயகம், சி. சுந்தரலிங்கம் —

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 7

**சமூக விரோத சக்திகளுக்கு இந்திய சமாதானப் படை துணைபோகின்றது. பாதுகாப்பு வழங்குகின்றது. இந்திய சமாதானப் படையின் இத்தகைய நடவடிக்கைகளினால் அவர்கள் மீது நாம் சந்தேகம் கொள்கின்றோம்.**

**இப்படி விடுதலைப் புலிகள் நேற்று மாலை அறிவித்தனர்**

புலிகளின் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலீபன் இதனை அறிவித்தார்.

"தமிழ் மக்களுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோள்" என்று தெரிவித்து அவர் விடுத்த வேண்டுகோள் வருமாறு:-

தமிழ் மக்கள் இன்று அடிப்படை உரிமை பறிக்கப்பட்டு ஏமாற்றுப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் எதிர்காலம் பரிதாபத்திற்கு உரியதாக இருக்கின்றது.

சமூக விரோத குழுக்களின் அடாவடித்தனங்கள் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றன.

நாளாந்தம் கொலை,

(6ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளர் பயணம்

கொழும்பு, செப். 7

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா

[6ம் பக்கம் பார்க்க]

## குளப்பிட்டிச் சந்தியில் வைத்து கடத்தப்பட்ட 2 பேரும் விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், செப். 7

வெள்ளி இரவு குளப்பிட்டிச் சந்தியில் இரவுக் காவலில் ஈடுபட்டிருந்த போது கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் புலிகள் உறுப்பினர்கள் இருவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இந்திய இராணுவத்தினர் புலிகள் பிரமுகர் திரு. சங்கரை கோட்டை முகாமுக்கு அழைத்து பிரஸ்தாப இருவரையும் அவரிடம் கையளித்தனர் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

துரைராசா கருணா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 16 ஆயிரம் கண்ணிவெடிகள் மீட்பு

கொழும்பு செப் 7

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இதுவரை 16 ஆயிரத்துக்கும் அதிகமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு உள்ளன.

தமிழ்ப் போராளிகள், இலங்கைப் படையினர், இந்திய அமைதிப்படையினர் ஆகியோர் தனித்தனியே இக்கண்ணிவெடிகளை அகற்றினர் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. (உ-எ)

## விண்ணப்ப முடிவுத் திகதி தள்ளி வைப்பு

பலாலி, செப். 7

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோர் நிவாரண உதவி பெறுவதற்குத் தமது விண்ணப்பப் பத்திரங்களைக் கையளிக்க வேண்டிய முடிவுத் திகதி ஒரு மாதத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதியுடன் முடிவடைய இருந்த முடிவுத் திகதி பலரது வேண்டுகோளுக்கிணங்க யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்தின் பணிப்பின் பேரில் பிற்போடப்பட்டுள்ளது (உ-119)

# குடாநாடு முழுவதிலும் இன்று மறியற்போர்

யாழ்ப்பாணம், செப். 7

யாழ் குடாநாட்டில் உள்ள இந்திய சமாதானப் படையினரின் முகாம்களுக்கு முன்னால் இன்று பெரிய அளவில் மறியற்போர் ஒன்றை நடத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்பாடுசெய்துள்ளது.

தமிழ் மக்கள் அனைவரும் தமது நாளாந்த கடமைகளை இன்று கைவிட்டு இந்த மறியல் போரில் பங்கு பற்ற வேண்டும் என புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

பின்வரும் காரணங்களை முன்வைத்து இந்த மறியற்போர் நடத்தப்படுவதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

★ சமூக விரோதக் குழுக்களுக்கு இந்திய சமாதானப்படை ஆதரவு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தல்.

★ ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எப். ஆகிய இயக்கங்களிடமுள்ள ஆயுதங்களை இந்திய சமாதானப் படை பறிமுதல் செய்ய வேண்டும் என வற்புறுத்துதல்.

★ சகல தமிழ் – அர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குட்டிமணியின் சகா அடித்துக் கொலை!

வடமராட்சி, செப். 7

ரெலோத் தலைவர்கள் குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்களின் நெருங்கிய சகாவான திரு. சின்னரத்தினம் ஞானலிங்கம் (வயது 35) இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டு அடித்துக் கொலைசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் ஞாயிறு அதிகாலை நடந்தது.

சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:-

காரொன்றில் ஆயுதபாணிகளாக வந்த இளைஞர்கள் சிலர், திரு. ஞானலிங்கத்தின் வீட்டுக்கு வந்து அவரைப் பலாத்காரமாக அழைத்துச் சென்றனர்.

வல்வெட்டித்துறை தெணியம்பையில் உள்ள அவரது வீட்டில் வைத்து துப்பாக்கி தாங்கிய இளைஞர்கள் குழு ஒன்றினால் அவர் கடத்திச் செல்லப்பட்டார்.

பின்னர் வல்வெட்டி பொலீஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள யாழ்-பருத்தித்துறை வீதியில்

( 6 ம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம்: 13 பேரடங்கிய குழுவிடம்?

கொழும்பு, செப் 7

உத்தேச வடக்கு, கிழக்கு மாகாணசபையில் 13 பேர் அங்கம் வகிப்பர் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

இவர்களுள் அரசு சார்பில் அங்கம் பெறவிருக்கும் சிங்கள, முஸ்லிம் அங்கத்தவர்கள் நால்வரையும் கிழக்கு மாகாண சிங்கள, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பிரகாரம் ஜனாதிபதி நியமிப்பார் எனத் தெரிய வருகிறது.

இரு சமூகங்களின் சார்பிலும் தலா இருவர் அங்கம் பெற இருக்கிறார்கள்.

இது குறித்து கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் எதிர்வரும் 11 ஆம் திகதி ஜனாதிபதி சந்தித்து ஆராயவிருக்கிறார்.

அங்கத்துவம் அம்பாறை, திருமலை முஸ்லிம்கள் இருவருக்குக் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கள சமூகம் சார்

[6ம் பக்கம் பார்க்க]

## ★ யாழ்குடா நாட்டில் அவசர புனரமைப்பு பணிகளுக்கு ரூ. 96 லட்சம்

### நேற்றைய மாநாட்டில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப் 7

யாழ் மாவட்டத்தில் அவசர புனர் நிர்மாண, புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள புனர்வாழ்வு அமைச்சு 96 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று நடந்த மாநாட்டில் நிதி ஒதுக்கப்பட்ட தகவலை புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ வெளியிட்டார்.

இம்மாநாட்டில் யாழ் மாவட்ட அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வன்செயல்களில் யாழ் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 757 வீடுகள் சேதமடைந்தன. இவற்றில் சுமார் 2 ஆயிரம் சிறிய வீடுகள் மோசமாகச் சேதமடைந்தன.

—இப்படி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்த 2 ஆயிரம் வீடுகளையும் திருத்த 60 லட்சம் ரூபாவை ஒதுக்குவதாக புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ மாநாட்டில் அறிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் புகார்ப்பிரிவு

யாழ்ப்பாணம், செப் 7

இந்திய அமைதிப் படையின் பலாலித் தலைமை அலுவலகத்தில் புகார்ப்பிரிவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது

காணாமற் போனவர்களைக் கண்டுபிடிப்பது, காணாமற்போன சொத்துக்களைத்தேடிக் கண்டுபிடிப்பது, காவல் கைதிகளை விடுவிப்பது ஆகிய பணிகளில் இப்புகார்ப் பிரிவு ஈடுபடும் என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)

## நாடாளுமன்றத் தாக்குதல்: தேடப்படும் அஜித்குமர விரைவில் கைதாவார்?

### லண்டன் இயக்கம் பற்றியும் தகவல்

கொழும்பு, செப். 7

நாடாளுமன்றக் கட்டட கிரனேட் தாக்குதல் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வரும் நாடாளுமன்ற ஊழியர் அஜித்குமார எங்கே இருக்கின்றார் என்பதைப் பொலீஸார் கண்டு பிடித்துவிட்டனர்.

விரைவில் அவரைப் பொலீஸார் கைது செய்வர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் லண்டனில் உள்ள இலங்கைப் பிரமுகர் ஒருவரை ஸ்கொட்லாந்து யார்ட் பொலீஸார் இரண்டாம் முறையாக விசாரித்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 2 வருட சம்பளத்திற்குச் சமனாக ஆசிரியர்களுக்குக் கடன் உடன் வழங்கப்படும்

பலாலி, செப். 7

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட யாழ் குடாநாட்டு ஆசிரியர்கள், ஏனைய கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கான இரண்டு வருடகால சம்பள அளவிலான கடன் உடனடியாக வழங்கப்படவுள்ளது.

யாழ். கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம் மன்சூர் இதற்கான பணிப்புரையை நிதிப் பிரிவு அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

முன்பு இக்கடன்கள் பல ஆசிரியர்கள்—ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தபோதும் இடையில நிதிப்பற்றாக்குறை காரணமாக அது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது இதனை வழங்குவதற்காக கல்விப் பணிப்பாளர் அமைச்சுடன் தொடர்புகொண்டு 180 இலட்சம் ரூபாவைப் பெற்றுள்ளார். (உ-119)

## சுபநேரம்

7-9-1987

திங்கட் கிழமை

ஆவணி 22

சுபநேரம்:-

12 04 முதல் 1.34 வரை

ராகுகாலம்:-

7 34 முதல் 9.04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பூரணைவிரதம்

உமாமகேஸ்வரர் விரதம்

## முச்சந்திமுரளி



அப்ப இனி இலங்கையில எல்லாத்துக்கும் வெளிநாட்டுப் படை தான் வருமோ...... இராமண்ணுமாருக்கு இனி என்ன வேலையோ...!

## அரசுப் பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்க வெளிநாட்டுப் படை?

கொழும்பு, செப் 7

அமைச்சர்கள், முக்கிய அரசுப் பிரமுகர்களுக்குப் பாதுகாப்புவழங்க வெளிநாட்டு இராணுவப் பிரிவின் உதவியை நாடுவது பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஜனாதிபதிக்கு இது சம்பந்தமாகக் கோரிக்கை விடப்பட்டுள்ளது

இத்தகவலை அமைச்சர் தொண்டமான் கொழும்புச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அமைச்சர்களைப் பாதுகாக்க வெளிநாட்டு இராணுவப் பிரிவின் உதவியை நாட ஜனாதிபதி தயங்கக்கூடாது என்று அக்கூட்டத்தில் அமைச்சர்களும் எம்பிக்களும் கோரிக்கை விடுத்தனர் (உ-எ)

## வளலாயில் சேதமுற்ற 114 வீடுகளை மீளமைக்க நோர்வே சங்கம் உதவி

### தலா ரூ 40 ஆயிரம் நன்கொடை

பலாலி, செப் 7

வளலாயில் இராணுவ நடவடிக்கையின் போது இடித்தும் எரித்தும் நாசமாக்கப்பட்ட 240 வீடுகளில் 114 வீடுகளைப் புதிதாக அமைத்துக் கொடுக்க நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்திருக்கிறது

ஒவ்வொரு வீட்டிற்கும் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள், தளபாடங்கள் ஆகியவற்றை வழங்குவதுடன் —

வீடு கட்டுவதற்குத் தேவையான கட்டட நிர்மாண ஆலோசனைகளையும் மேற்படி செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்குவுள்ளனர். (உ-119)

## ஒரு வார காலத்தில் கொழும்புப் பேச்சு!

கொழும்பு, செப். 7

மாகாண சபை அதிகாரப் பரவலாக்கல் பற்றிய மூன்றும் கட்ட இந்திய-இலங்கைப் பேச்சுக்கள் இன்னும் ஒரு வார காலத்தில் கொழும்பில் இடம்பெறும்.

—இப்படி கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் வடக்கு, கிழக்கு மாநில இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது குறித்து இறுதி முடிவு எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. (உ-எ)

## குருநகர்ப் பகுதியில் தொடர்ந்து திருட்டு!

குருநகர், செப். 7

யாழ். பாங்ஷால் வீதியில் தங்கியுள்ள திருகோணமலை அகதிகளிடம் சனி இரவு ஆயுத முனையில் கசற் றெக்கோடர், கூறைச்சேலை போன்ற பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் நின்ற நாயைச் சுட்டுக் கொன்ற கொள்ளையர் மேற்படி பொருள்களை அபகரித்துச் சென்றனராம்.

சில தினங்களுக்கு முன்பாக பாங்ஷால் வீதியில் உள்ள குருபாபா இல்லத்திலும் ஆயுதக் கோஷ்டி பதக்கம் சங்கிலி, ரொக்கப் பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே வீதியில் இராட்சணியசேனை இல்லத்தில் கதவை உடைத்து மரத் தளபாடங்கள் திருடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு சென். ஜேம்ஸ் கிழக்கு வீதியில் வி.ஜே.கொன்ஸன்ரைன் என்பவரது வீட்டில் தாலிக்கொடி

(6ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் ... வரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இன்னஞ் சிறு விளம்பரம்**

**பிறந்த நாள் வாழ்த்து**

வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த பரதலிங்கம் – கமலபூஷணி தம்பதிகளின் மகள் பிரியங்கா இன்று 6-9-87 தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அக்கா, ஐயா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியமாமா, சின்னமாமா, பெரியசித்தி, சின்னச்சித்தி, சித்தப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார் ஆகியோர் வாழ்க வென வாழ்த்துகின்றார்கள். (1592)

**சேவை**

இலங்கை மின்சார சபை லங்கா சீமெந்து லிமிட்டெட், வெளிநாடுகள் ஆகியவற்றில் மின் அத்தியட்சகராகவும், பொறியியலாளராகவும் 25 வருடங்களுக்கு மேல் சேவை செய்து அனுபவமுள்ளவரின் மேற்பார்வையில் சகல வயரிங் வேலைகளும், வயின்டிங் வேலைகளும் செய்யப்படும். ஆலோசனைகள் இலவசம். OMEGA, Manipay Road, Jaffna. (904)

**தேவை**

சிங்கப்பூரில் தமிழ்க் குடும்பத்தில் இரண்டு வயதுப் பிள்ளையைப் பராமரிக்கக் கூடியதான நல்லொழுக்கமுள்ள பணிப்பெண் தேவை. படித்த – குழந்தைப் பராமரிப்பு, மொன்ரிசோறிக் கல்வியறிவு உள்ளவர் விரும்பத் தக்கது. நேரில் வரவும். ச. புவனசுந்தரம் பிரசித்த நொத்தாரிசு – வளாகலேன் – திருநெல்வேலி. (1656)

**விற்பனைக்கு**

(1) 16 பரப்புக்காணி விற்பனைக்கு புன்னாலைக் கட்டுவன் (2) 12 பரப்புக்காணி பலாலி வீதி. [3] 4 பரப்புக் காணி ஊரெழு [4] 18 பரப்புக்காணி பலாலி வீதி. உரிமையாளர் விரைவில் லண்டனில் இருந்து விடுமுறையில் வந்து விற்பனையை முடித்துக் கொண்டு திரும்புவர். தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தரகரும் தொடர்பு கொள்ளலாம் விளம்பர எண் – 69 மே/பா உதயன் யாழ்ப்பாணம்.

**கல்வி**

11ம் ஆண்டிற்கான கணிதபாடத்தில் துரித மீட்டலும் வினு விடை வகுப்புகளும் விரைவில் ஆரம்பமாகவுள்ளன பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும் உடன் தொடர்பு கொள்ளவும். கோகுலன் 93A கண்டிவீதி யாழ்ப்பாணம்.

# வடக்கு இளைஞர் சேவை மன்ற நிர்வாகம் தனியாக பிரிக்கப்படும்

## சரித்த ரத்வத்த தகவல்

கிளிநொச்சி, செப் 7

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு வடமாகாணத்துக்கென தனியான தேசிய இளைஞர் சேவை மன்ற நிர்வாகம் மீண்டும் கொண்டுவரப்படும்.

தற்போது யாழ்ப்பாணம் தவிர்ந்த வடபகுதியிலுள்ள ஏனைய மாவட்டங்களின் நிர்வாகமும் வடமத்திய மாகாணங்களுடன் சேர்க்கப்பட்டிருப்பது ஒரு தற்காலிக ஏற்பாடாகும்.

தேசிய இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளர் நாயகம் திரு சரித்த ரத்தவத்த இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் புனருத்தாரண வேலைகளில் உதவி அரசாங்க அதிபர்கள், அரசாங்க அதிபர்கள் தயாரித்துத் தரும் புனருத்தாரண வேலைகள் சம்பந்தமாக பட்டியலை நாம் பூரணமாக ஏற்றுக் கொள்ளாது கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு அலசி ஆராய்ந்து இளைஞர் சழகங்கள் திட்டங்களைத் தயாரித்துத் தந்தால் புனருத்தாரண வேலைகளில் சேர்த்துக்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக அபிவிருத்தி வேலைகள் நடைபெறுதிருந்தமையை மனதில் கொண்டு வெளிநாடுகளிலிருந்து உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் வடக்குக் கிழக்கிற்கு கூடுதல் பணம் ஒதுக்கீடு செய்வோம்.

தற்போது வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய இடங்களை உள்ளடக்கிய தமிழ், முஸ்லிம் இளைஞ யுவதிகள் சுமார் நூற்றி இருபத்தைந்து பேர் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுகின்றனர்.

இவர்களில் முப்பத்தொன்பது பேர் அண்மைக்காலத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் இவர்களை விட மேலும் நாற்பதுபேர் இவ்வருட முடிவுக்குள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இவ்வாறு திரு. ரத்வத்த தெரிவித்தார். (ஒ-76)

### நிவாரணப்பணி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 7

வடமராட்சிப் பகுதியில் குடும்பத் தலைவரை இழந்து அல்லற்படும் குடும்பங்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமத்தில் போயாதினம் இன்று காலை 10 மணிக்கு நிவாரணம் வழங்கப்படும்.

பட்டயக் கணக்காளர் திரு அ சோமசுந்தரம் பிள்ளை இந்த நிவாரணப் பணியை ஆரம்பித்து வைப்பார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களில் பலரை ஆச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தா நேரில்சென்று பார்வையிட்டு அவாகளது நிலையை அவதானித்த பின்னரே இந் நிவாரணம் வழங்கப்படுகின்றது. (உ)

### இப்படியும் கள்வர்கள்

அராலி, செப். 7

மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த மாட்டின் பிற்பகுதியைத் திருடர்கள் வெட்டிச் சென்றனர் இதனால் மாடு இறந்துபோய்விட்டது.

இச்சம்பவம் அராலி தெற்கில் அண்மையில் நடைபெற்றுள்ளது,

மாடு ஒன்று மேச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த வேளை காணமற் போய்விட்டது. மாட்டைத் தேடிச் சென்றபோது கட்டப்பட்டிருந்த இடத்திற்கு அண்மையில் இருந்த பற்றைக்குள் மாடு பின்பக்கம் வெட்டி எடுக்கப்பட்ட நிலையில் இறந்து கிடக்கக் கணப்பட்டது.

இது சம்பந்தமாக அப்பகுதிமக்கள் சந்தேகத்தின் பேரில் இருவரைப் பிடித்து புலிகளிடம் ஒப்டைத்துள்ளனர். விசாரணை நடைபெறுகிறது. (ஒ 12)

### வடக்கு,கிழக்கு வரியிறுப்பாளருக்கு நிவாரணம் வழங்குமாறு நிதியமச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செப் 7

வடக்கு, கிழக்கு பகுதிகளில் பாதிப்படைந்த தவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வரிப்பளு குறைப்பு, அபராத நீக்கம், புதிய கைத்தொழில்களுக்கு வரியிலிருந்து விடுதலை போன்றவற்றைச் செய்து நிவாரணம் பெற்றுத்தரவும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை நிதி அமைச்சருக்கு அனுப்பி வைக்க வடக்கு, கிழக்கு பிராந்திய வரியிறுப்பாளர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பெருந்தொகையான கைத்தொழில் நிறுவனத்தினர் வர்த்தகர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள் பொறியியலாளர்கள் ஒப்பந்தக்காரர்கள் போன்ற பல்வகைப் பட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (ஒ)

### புலிகளால் வைக்கப்பட்ட கண்ணிகள் ஏற்கனவே அகற்றப்பட்டு விட்டன

வடமராட்சி, செப். 7

வடமராட்சியின் பல பகுதிகளிலும் புலிகளால் வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடிகள் ஏற்கனவே அகற்றப்பட்டு விட்டன.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு சூசை சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:–

இந்திய- இலங்கை ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பல தினங்களிலேயே எம்மால் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் எல்லாவற்றையும் நாம் அகற்றி விட்டோம்.

ஸ்ரீலங்கா இராணுவத்தால் வைக்கப்பட்ட கண்ணிவெடிகளில் சிக்கியே அண்மைக் காலங்களில் பலர் கொல்லப்பட்டும், காயப்பட்டும் இருக்கின்றனர்.

இச்சம்பவங்களுக்கு ஸ்ரீலங்கா அரசே பொறுப்பு ஏற்கவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (ஒ-60)

### வவுனியா பிரசைகள் இணைப்புக்குழு

யாழ்ப்பாணம், செப் 7

வவுனியா, செட்டிகுளம், ஓமந்தை, நெடுங்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிரசைகள் குழுக்கள் ஒன்றிணைந்து இணைப்புக்குழு ஒன்றை அமைத்துஸ்றன.

இணைப்புக்குழு சட்டத்தரணி என். எம். எக்ஸ். சொர்ணபாலா தலைமையில் இயங்கும்.

இவ்விணைப்புக்குழு கடந்த நான்குவருட காலங்களில் வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களின் விவரங்களைத் திரட்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் தத்தமது பகுதி பிரசைகள் குழுவிடம் விவரங்களை கொடுக்குமாறு கேட்கப்படுகிறார்கள். (ஒ)

### நிதி உதவி

சங்கானை, செப். 7

பிரான்ஸில் வாழும் சங்கானையைச் சேர்ந்த 15 இளைஞர்கள் சங்கானையிற் தஞ்சமடைந்த அகதிகளின் புனர்வாழ்வுக்கென 13 ஆயிரம் ரூபாவைச் சேகரித்து சங்கானை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

### தமிழ் கற்பிப்பதற்கு

# தகுதி வாய்ந்த ஆசிரியர் மிக குறைவாக உள்ளனர்

## நூல்வெளியீட்டு விழாவில் பேச்சு

'இப்போது எங்கள் நாட்டிலே தமிழ் கற்பிப்பதற்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் மிகவும் குறைவாகவே உள்ளார்கள். பலருக்கு இலக்கணத்திலே போதிய அறிவு இல்லை. ஆனல், பாடத்திட்டத்தில் இலக்கணப்பகுதி அதிகமாக உள்ளது.'

யாழ் இலக்கிய வட்டத்தினர் நடத்திய 'பஞ்சாஷ்ரம்' நூல் வெளியீட்டு விழாவிற் பேசிய பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் இவ்வாறு கூறினர்.

கடந்த சனிக்கிழமை நல்லை ஆதீன மண்டபத்தில் எழுத்தாளர் வரதர் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில். பிரதம கல்வி அதிகாரி தொடர்ந்து கூறியதாவது:–

'தமிழ் கற்பிப்பதற்குத் தகுதிவாய்ந்த ஆசிரியர்களைத் தருமாறு அதிபர்கள் வற்புறுத்துகிறார்கள் ஆனல் அத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது.

இத்தகைய குறையை நீக்குவதற்குப் பண்டிதர் பஞ்சாட்சர சர்மா போன்றவர்களே பணிபுரிய வேண்டும்.

பண்டிதர்கள் மரபினைப் பேணுவதால் அவர்கள் பிற்போக்கானவர்கள் என்ற ஒரு தவறான கருத்துப் பரப்பப்பட்டுள்ளது. மரபினைப் பேணுவது என்பது பிற்போக்கு அல்ல, அது பின் நோக்கு ஆகும்.'

பேராசிரியர் க. சிவத்தம்பி வெளியீட்டுரையும் விரிவுரையாளர் என். சண்முகலிங்கம் அறிமுக உரையும் மயிலங்கூடலூர் பி. நடராஜன் ஆய்வுரையும் நிகழ்த்தினர்.

நல்லை ஆதீன சுவாமிகள் அருளுரை ஆற்றினர்.

தொழிலதிபர் திரு. க. கனகராசா நூலின் மூதற் பிரதியைப் பெற்ருர். (ஒ-கு)


# பிரயாண ஒழுங்குகள்

## ★ குவைத் ★

✯ பின்வருவோருக்கான இறுதி நேர்முகப் பரீட்சை (Final Selection) கீழ் வரும் திகதிகளில் நடக்க இருப்பதால் யாபேரும் உடனே வந்து தங்களுக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**11-09-1987தொடக்கம் 14-09-1987 நேர்முகப் பரீட்சை நடைபெறும்**

- LABOURERS
- H. V. DRIVERS
- H. E. OPERATOR
- H. E MECHANIC
  (Vehicle Repair Mechanic)
  (Engine Repair Mechanic)
- WELDERS
- ELECTRICIANS
- Leath Mechanic Operator
- MECHANIC HELPERS
- COOKS
- ASST-COOKS

★ 09 - 09 - 1987
இங்கிருந்து செல்ல இருப்பதால் யாபேரும் உடனே தொடர்பு கொள்ளவும்

✶ மேலும் Labourers தேவையாக இருப்பதால் 20 வயதுக்குமேற்பட்ட தேகாரோக்கியமுள்ள யாபேரும் 09-09-1987க்குப் பிந்தாமல் பின்வரும் ஆவணங்களுடன் வரவும்

✯ PASS PORT
✯ Pass port Photo Copy
✯ Service Certificate

★ PHOTO P. P. SIZE 10
★ சம்பளம்: 36 K.D.
★ கால எல்லை 4 வருடம்
★ உணவு, இருப்பிடவசதி, வைத்தியவசதி யாவும் இலவசம்

Head Office
**Construction & Development Company Ltd.**
37 S. DE. S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.

தொடர்பு:
V. P. Balasubramaniam
C/o N. V- Ponnuthurai
School Lane, Kondavil West, Kondavil.



# Science Academy - Jaffna

(வெலிங்டன் சந்தி, B. M. C. க்கு முன்பாக)

DAY CLASS ஆரம்பம் 9 . 9 . 87 8 . 15 A. M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை 8-15 மணி | PHYSICS | - மணியம் B. Sc | 10-30 மணி | BOTANY | -குணசீலன் B. Sc. |
| „ 9 15 „ | CHEMISTRY | - ரஞ்சன் B. Sc. | 11-30 „ | ZOOLOGY | இளங்கோவன் B.Sc. |
| „ 10-30 „ | APPLIED | - பிறேம்நாத் B.Sc. | 11-30 „ | PURE MATHS | பிறேம்நாத் B. Sc. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாது அம்பாறையைக் காப்பாற்ற முடியாது

## தமிழரிடமிருந்து விடுவித்துக் கொள்வதால் முஸ்லிம்கள் பிரச்சினை தீரப் போவதில்லை

'இலங்கை - இந்திய ஒப்பந்தமும் முஸ்லிம்களின் நிலைப்பாடும்' என்ற தலைப்பில் கிழக்கு வளாக பட்டதாரிகள் குழு ஏற்பாடு செய்த கருத்தரங்கு ஒன்று அண்மையில் மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவத்தம்பி, யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் ஜனாப் எம். வை. சித்திக் ஆகியோர் கருத்தரங்கில் தெரிவித்த கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பேராசிரியர் சிவத்தம்பி**

வடக்கு - கிழக்கு இணையா விட்டால் அம்பாறை மாவட்டத்தை முஸ்லிம்களால் நிச்சயம் காப்பாற்ற முடியாது. அதே நேரம் தமிழர்களிடமிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதன் மூலம் அவர்களின் பிரச்சினைகள் தீரப்போவது மில்லை.

முஸ்லிம்களை பொறுத்தவரை கொழும்பு தலைமையை ஏற்றுக் கொண்டதால்தான் அம்பாறை மாவட்டத்தில் தமது பெரும்பான்மையை இழந்தனர். அது மட்டுமன்றி தமது மத பரிமாணத்தையும் இழந்துள்ளார்கள்.

முஸ்லிம்கள் தமிழர்களை விட்டு பிரிந்து விடுவதால் தமது பிரச்சினைகள் தீர்ந்து விடுமென கருதுவது தவறு சிங்களவர்களுடன் இணைந்தால் தாய்மொழி உட்பட கூடுதலான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து முஸ்லிம்களுக்கு சில சந்தேகங்கள், ஐயப்பாடுகள் உருவாகியுள்ளன அது நியாயமானதே. தமிழ் - முஸ்லிம் இரு சமூகங்களும் பரஸ்பரம் இதனை தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டும்.

முஸ்லிம் சமூக பரம்பலாக சகல இடங்களிலும் இருப்பதால் ஓரிட பிரச்சினையாக கருதாமல் சகல இட பிரச்சினையாகவும் கருதப்படல் வேண்டும்.

மத பண்பாடு. தனித்துவம் ஒரு முக அமைப்பு அவர்கள் விருப்பப்படி அமைய வேண்டும். அவர்களின் நிலவாரியான உரிமை எக்காலத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும்.

கல்வி, அபிவிருத்தி, தொழில் உட்பட சகல விடயங்களிலும் முன்னேற்றமான திட்டங்களை தமிழர்கள் வகுத்து திட்டமிட்ட முறையில் முஸ்லிம்களை முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

இத்தகைய நிலையில் நாம் செயல்படும்போது வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக அவர்களிடையே காணப்படும் சந்தேகங்கள், ஐயப்பாடுகள் நீங்கி விடும்.

**சித்திக்**

முஸ்லிம்களின் தனி மாகாணசபைக் கோரிக்கை சாத்தியப்படாத கோரிக்கை ஆகும். அவர்கள் தமது பயம். சந்தேகம் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்காக முன் வைத்த கோரிக்கை தான் அது சிங்களவரிடம் ஏற்பட்ட இழப்பு தமிழரிடமும் ஏற்படலாம் என்ற பயம், சந்தேகம் இதுவரை நீங்கவில்லை.

இஸ்லாமிய தமிழர் என முஸ்லிம்களை அழைப்பது அவர்களை புண்படுத்தும் செயலாகும். அவர்கள் முஸ்லிம்கள் என்ற தனித்துவத்துடன் தான் தமது உறவை வளர்க்க விரும்புகிறார்கள்

முஸ்லிம்கள் சிங்களவர்களை நம்பும் அளவிற்கு தமிழர்கள் நடத்துவார்களா? என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

தமிழ்க் குழுக்கள் இதுவரை நடத்திய பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் அங்கம் வகிக்கவில்லை. அவர்கள் முஸ்லிம்களின் பிரச்சினை பற்றிப் பேசத்தவறிவிட்டார்கள். இது தலைவர்களும், போராளிகளும் விட்ட தவறாகும்.

அது மட்டுமின்றி 1985 தமிழ் - முஸ்லிம் கலவரத்தைத் தடுக்க போராளிகள் முயலவில்லை. அரச படைகளை விரட்டியடிக்கும் போராளிகள் ஏன் தீய சக்திகளை விரட்டியடிக்கவில்லை. இத்தகைய சந்தேகங்கள் தான் முஸ்லிம்களிடம் உள்ளன.

முஸ்லிம் பிரச்சினைகளை தீர்க்க மாற்று வழிகளை முன்வைக்க போராளிகளோ, தமிழ் அரசியல் கட்சிகளோ தவறிவிட்டன. இதனால் முஸ்லிம்கள் நம்பிக்கை இல்லாத நிலையில் இருந்து வருகிறார்கள்

உறுதியான நிலைப்பாடு, உத்தரவாதம், நட்பு, பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு, பிரசன்னம், நல்லுறவு போன்ற வழிகளில் முஸ்லிம்களின் நம்பிக்கையை வளர்க்கமுடியும் சிங்களவர்களைவிட கூடுதல் நன்மைகளைக் கொடுக்கத் தமிழர் தயாராக இருக்க வேண்டும்.

முஸ்லிம்கள் சார்பாகவும் பிழைகள் உண்டு இதனையும் நாம் ஏற்க வேண்டும். சிங்களம் தாய்மொழி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச ரீதியில் முறியடிக்க அமைச்சர் ஹமீத் பயன்படல், 1985 தமிழ் — முஸ்லிம் கலவரம், வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிரான கோஷம், முஸ்லிம் அரசியல்வாதிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

குறள்:
எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்.

பொருள்:
எளிய செவ்வி உடையவனாய் ஆராய்ந்து நீதிமுறை செய்யாத அரசன் தாழ்ந்த நிலையில் நின்று (பகைவரில்லாமலும்) தானே கெடுவான்.

# பிறர் உணர்ச்சிக்கு இடம் கொடு; பிரதியுபகாரம் கருதித் தொண்டு செய்யாதே

## இதுவே தெய்வீக வாழ்வு! சுவாமி சிவானந்தரின் போதனைகள்

சாந்தியும் செழுமையும் சந்தோஷமும் நிறைந்த ராமராஜ்யத்தைப் புவியிலே அமைக்க முயன்ற புண்ணிய புருஷர்களிலே தலை சிறந்த இமயஜோதி ஸ்ரீ சுவாமி சிவானந்தாஜி மகாராஜ் அவர்கள். அணுகுண்டும் ஆதிக்கவெறியும் அசைக்க முடியாத ஆத்ம சக்தியை வளர்க்க வழிகாட்டிடும் அவர் அகவிருள் போக்கி அருள் ஒளி காட்டும் அவரது பொன் மொழிகளை உலகெலாம் தலை வணங்கிக் கேட்கின்றது.

சுவாமி சிவானந்தாஜி மகராஜ் அவர்களின் நூற்றாண்டு ஜயந்தி விழாவை இன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு உலகெங்கிலும் உள்ள திவ்ய ஜீவன சங்கங்கள் ஒழுங்குபடுத்தி உள்ளன. 07 - 09 - 86 தொடக்கம் 08-09-87 வரையுள்ள ஒருவருட காலத்தை சுவாமி அவர்களின் நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடும் வகையில்ஒவ்வொருமாதமும்சிறபுச் சொற்பொழிவுகள், பூஜை, பிரார்த்தனையுடன் கொண்டாடி வந்தனர். (யாழ் திவ்ய ஜீவன சங்கமும் மேற்படி விழாவை இன்றும்,நாளையும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஒழுங்கு செய்துள்ளது. இன்று திங்கட்கிழமை காலை பூஜை, பஜனை திருவிளக்குப் பூஜை, கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் மாலை செந்தமிழ் திலகம் புஷ்பா செல்வநாயகம், பேராசிரியர் செ சிவஞானசுந்தரம் (நந்தி) (பீடாதிபதி. யாழ் மருத்துவ பீடம்) ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும். திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தா அவர்களின பக்திப் பாடல்களும் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை சுவாமி அவர்களின் உருவப்பட ஊர்வலமும், நல்லை ஆதீனம், மகா சந்நிதானம், சோமசுந்தர் பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் ஜயந்தி விழாக் கொடியேற்றுதலும். அகண்டநாம பஜனையும் நடைபெறும். மாலை நல்லை ஆதீனம் மகா சந்நிதானம் தவத்திரு சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், துர்க்கா



சிவானந்தர்

துரந்தரி சிவத்தமிழ் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், ஆ. செ. நடராசா அவர்கள், (தலைவர்,திவ்ய ஜீவன சங்கம், கொழும்பு) வே. ந. சிவராசா அவர்கள் (பதிவாளர், யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும், இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

### மற்றவர் ஆனந்தம் அவரது இலட்சியம்

எல்லோரும் சுவாமி சிவானந்தரைப் பற்றி அதிகம் அறிந்திருக்க மாட்டார்கள் அவர் ஒரு பெருந்தகையான ஆத்மீக புருஷராக அவதரித்தார் அதிசயப்படத்தக்கதாக இருதயத்தில் அன்புப் பொக்கிஷமாக விளங்கினர். அவரது வாழ்வு முழுவதும் தனது ஆனந்தத்தைப் பொருட்படுத்தாது, மற்றவர்களின் ஆனந்தத்தையே வாழ்வில் இலட்சியமாக வைத்துத் தனது வாழ்வை நடத்தினர்.

அவர் சமய, இன, பால், தேச வேற்றுமையோ கிழக்கு-மேற்கு என்ற வேற்றுமையோ இன்றி சகலரையும் தனது ஆன்மாவாகவே தரிசித்தார்.

எந்த மனதில் ஆறுதலின்மை ஏற்படுகிறதோ அங்கே ஆனந்தமோ உபசாந்தமோ ஏற்படாது. தேகத்திலே எந்நேரமும் சாந்தமும், உபசாந்தமும் ஏற்படவேண்டுமாயின், எங்கள் பழக்க வழக்கங்களை மாற்ற வேண்டும்.

வாழ்வில் பிரபல்யப்படுத்தாமல், உண்மையில் உறைந்து நில். மிதமிஞ்சிய ஆசைகளுக்கு உன்னை அடிமைப்படுத்தி விடாதே. அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளை விட வேறு எததேவைகளிலும் உன் சித்தம் செல்லாதிருக்கட்டும். இச்சைகளைப் பல தரப்படுத்தல், புத்தி சாலித்தனமல்ல. பல தரப்பட்ட ஆசைகளை அவாவுதல், ஒருக்காலும் முடிவுபெறாத பாலைவனத்தில் ஓடும் ஆறுகளுக்கு ஒப்பாகும். எரிகின்ற நெருப்பை விறகைப் போட்டுப்போட்டு அளிக்க முயலுவது போல இச்சைகளை ஆசைப்பட்டுப்பட்டு அழிக்கமுடியாது. பெருகும் ஆசையை விடவிட ஆனந்தம் பெருகும்

இவைகளை ஒவ்வொருவரும் தவறாது மனதில் கொள்ள வேண்டுமென்பது சுவாமி அவர்களின் பேரவா. இந்த உண்மையை உணர்ந்து தானாகவே வாழ்ந்து கண்ட இலட்சியவாதி சுவாமி அவர்கள்.

### மற்றவர் உணர்ச்சிக்கு இடம் கொடு

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும், வித்தியாசமில்லாமல் மாறா ஆனந்தத்தைத் தேடப் புறப்பட்டு. அழியா இன்பத்தை அறியும் உலகப் பொருள்களூடே தேடத் தொடங்கி விட்டவர்.

இவர்களை சுவாமி அவர்கள் அன்பாகத் தம்மிடம் அழைத்துச் சொன்னதாவது:. 'காணுகின்ற ஒவ்வொரு பொருளிலும், நிலைமாறு உண்மையும், மாறுகின்ற பொய்மையும் ஒருங்கி இருக்கின்றன. ஆகையால் உண்மையை ஆள விரும்பும் நாம். ஒவ்வொரு பொருள்களிலுமுள்ள பொய்மை, மெய்மைகளை பெரியார்களது துணைகொண்டு அறிந்து மெய்யிலுறைத்து நிற்கப் பழக வேண்டும்.

எச்சந்தர்ப்பத்திலும் கடும்சொல் பாவியாது மற்றவர்களுடைய உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து மற்றவர்

(5 ஆம் பக்கம் பார்க்க

**சி. கனகரத்தினம்**
(தலைவர், திவ்ய ஜீவன சங்கம், யாழ்ப்பாணம்)

# இலங்கை ஒரு முன்னுதாரணம்: ஆளுக்கு ஒரு வாக்கு என்ற முறை முழுத் தோல்வி!

## சிங்கைப் பிரதமர் கருத்து

ஆகஸ்ட் 16 இல் சிங்கப்பூர் சுதந்திர தினப் பொதுக் கூட்டம் நடந்தது.

63 வயதான பிரதமர் லீ குவான் யூ உற்சாகமாகக் கலந்து கொண்டார்.

குடியரசு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டது அவருக்கு உற்சாகத்தை ஏற்படுத்திஇருக்கவேண்டும்.

> சிங்கப்பூர் 220சதுர மைல் விஸ்திரணம் கொண்டது.
> தலைநகரம் சிங்கப்பூர். சனத் தொகை சுமார் 3 லட்சம் இருக்கும்.
> 79 பேர் கொண்ட நாடாளுமன்றம் உள்ளது.
> இன விதாசாரம்: சீனர்கள்-76சதவீதம். மலாயர்கள்-15 சதவீதம்.
> இந்தியர்கள்-6 5சதவீதம்.

2 மணித்தியாலங்கள் 40 நிமிடங்கள் மலாய், மண்டாரின், ஆங்கிலம் ஆகிய மொழிகள் பிரதமர் பேசினர்?

பல இன மக்கள் வாழும் சிறிய தீவைப் பாதிக்கும் பிரச்சினை பற்றியே அவரின் பேச்சு இருந்தது.

புதிய கொள்கை அறிவிப்பு எதையும் அவர் விடுக்கவில்லை தேர்தல் முறையில் ஏற்படுத்தப் படவிருக்கும் மாற்றங்கள் பற்றித் தான் பிரதமர் வலியுறுத்தினர்.

இனம், மதம் ஆகிய நுணுக்கமான பிரச்சினைகள் தான் பேச்சின் பெரும் பகுதியை எடுத்தன.

'சிங்கப்பூரில் உள்ள எல்லா இன மக்களின் நலன்களிலும் நான் அக்கறை காட்டுகின்றேன்; இளைய தலைமுறை அப்படிக் காட்டவில்லை' இப்படிச் சொன்னர் பிரதமர் லீ.

கடந்த இரண்டு தேர்தல்களில் வாக்களிப்பு எப்படி அமைந்தது என்பது பற்றியும் பிரதமர் பேசினர்.

'தொகுதியைப் பராமரிக்கக் கூடிய தகுதியான ஒருவரைத்தான் மக்கள் தெரிவு செய்து வருகின்றனர் மலாய் வேட்பாளருக்குத் தான் கஷ்டமாக உள்ளது. இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்'. இப்படிப் பிரதமர் தெரிவித்தார்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவம், மலாய் எம். பிக்கள் நியமனம் செய்யப்படுவது, மலாயர்களுக்கு என்று தனித் தொகுதிஏற்படுத்துவது- இம் மாற்று வழிகள் சரிவரா என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

எம் பிக்கள் குழு ஒன்றைத் தெரிவு செய்யும் முறையே அமுல் நடத்தப்படும் என்பதை பிரதமர் தனது பேச்சில் உணர்த்தினர்.

சீன, மலாய், இந்திய வேட்பாளர்கள் ஒரு குழுவாகப் போட்டியிடுவர். கூடுதல் வாக்குகள் பெறும் கட்சிக்கு மூன்று ஆசனங்களும் கிடைக்கும்.

ஆளும் மக்கள் நடவடிக்கைக் கட்சிக்கு ஆதரவாகவே இத்திட்டம் அமையும் என்று எதிர்தரப்பினர் குறை கூறுகின்றனர்.

ஓர்ஆள் - ஒருவாக்கு என்ற திட்டம் புஸ்வாணமாகி விட்டது. இத் திட்டம் 1984 தேர்தலின் பின்னர் மாற்றப்பட்டு விடும் என்று பிரமர் லீ சொன்னர்

ஆனல் மக்கள் நடவடிக்கைக்கட்சி இக்கொள்கையில் இருந்து மாறிவருகின்றது.

1912 இல் இருந்து இலங்கையில் அமுல் நடத்தப்படும் இத் திட்டம் ''புலிகள் பஸ்நிலயங்களைத் தகர்ப்பதுடனும் இலங்கை விமானப் படை யாழ்ப்பாணத்தில் குண்டு போட்டுச்சொந்த மக்களைக் கொல்வதுடனும் முடிவுக்கு வந்துவிட்டது.

''ஆகவே ஒரு ஆள்ஒரு வாக்கு முறை அவ்வளவு இலகுவான மறுமொழி அல்ல'' இப்படி பிரதமர் லீ குறிப்பிட்டார்.

பிரதமர் லீயின் இளம் அமைச்சர்கள் கூறுகின்றார்கள், ஒரு ஆள் - ஒரு வாக்குத்திட்டம் மாற்றப்படமாட்டாதுஎன்று.

அரசு எதிர்ப்பாளர்கள் சிலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில்சிங்கப்பூர் அரசு 22 பேரை மார்க்ஸிஸ சதிகாரர்கள் என்று குற்றஞ்சாட்டி தடுப்புக்காவலில்வைத்து மத மோதல்களினை வரக் கூடிய ஆபத்து பற்றிக் கருத்து வெளியிட்ட பிரதமர் மேற்படி 22 பேரும் கைது செய்யப்பட்டது சரியான செயல் என்று வாதிட்டார்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோர் ரோமன் கத்தோலிக்கத் தேவாலய ஊழியர்கள் ஆவர்.

எல்லாச் சமயங்களும் சாதகமாகவே அரசு நடந்து கொள்கின்றது என்று பிரதமர் லீசொன்னர்.

''சமயம் சொல்லப்பட்ட கோட்டைத் தாண்டி, சமூகச்செயல் திட்டம், விடுதலைத் தத்துவம் என்று போகத் தொடங்கினல் சிங்கப்பூரின் துன்பங்கள் நிறைந்த பெட்டியை நாம் திறக்கின்றோம் என்பது தான் கருத்து''— இப்படி எச்சரித்தார் பிரதமர் லீ.

'ஒருவரின் மத நம்பிக்கை அரசியலினுள் நுழைந்தால், மற்றவரும் அதைப் பின்பற்றுவர். அதன் முடிவு பல சமய சமூகம் என்பது துண்டு துண்டாகி விடும் என்பதாகும்'' இப்படி பிரதமர் சொன்னர்.

பிரதமர் லீ மேலும் சொன்னர்: ''எனது வாழ்நாளில்நான் நான்கு தேசிய கீதங்கள் பாடியிருக்கின்றேன். பிரிட்டன், மலேசியா, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய தேசிய கீதங்கள் அவை. நாம் இப்போது 'மஜீல்லா' பாடுகின்றோம். இது மட்டும் தான் நாம் பாடப்போகும் தேசிய கீதமாக இருக்கப்போகிறது இப்படி லீ கேட்டார்.

''இளம் சந்ததியின்ரே சந்தர்ப்பத்தைக் காத்திராது முயற்சி செய்து முன்னேறுங்கள்''— [illegible] என்றார் சிங்கப்பூர் பிரதமர் லீ.

**உருளும் உலகில்**
**எஸ். ஜி**

## வாசகர் நிருபம்

### அரச ஊழியருக்கு நிவாரணம் தேவை

அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களில் அரச ஊழியரும் அடங்குவர்.

தற்போது வாழ்க்கைச் செலவினல் ஏற்கனவே மிகவும் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்கள் குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் சமதுஉடைமைகளை இழந்தும் வீடு வாசல்களை இழந்தும் தமது குடும்பத்தவருடன் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் அகதிகளாக தஞ்சம் புகுந்து வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

தற்போது இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தப் பிரகாரம் மீண்டும் நிலைமை வழமைக்குத் திரும்பியடியால் தமது சொந்த இடங்களுக்கு வந்து தமது நாளாந்த கருமங்களை நடத்தி வருகிருர்கள்.

இந்நிலையில் அரசாங்க ஊழியர்கள் மிகவும் கஷ்டமான வாழ்க்கை நடத்த வேண்டி உள்ளது. ஆகவே அரசாங்கம் அல்லது உதவி வழங்கும் ஸ்தாபனங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்ட ஊழியர்களை கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஏற்ற நிவாரணங்களை வழங்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ச. பரமேஸ்வரன்
பாதிக்கப்பட்ட வடமராட்சி அரசாங்க ஊழியர்கள் சார்பாக

ஆண்களின் தேவைகளை நிறைவேற்றுகிறது.
**ரிஷி அஜமாமிச லேகியம்**
முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது
அதன் பயன்கள்:-



இல் வாழ்க்கையில் சிறந்த இன்பம் பெறவும், இழந்த சக்தியை மீட்டுக் கொடுப்பதுடன் எல்லா நரம்புகளையும் முறுக்கேற்றி வீரிய விருத்தியை கொடுக்க வல்லது. தளர்ச்சி, சோர்வு, களைப்பு, சிறுபிராயத்தில் அறியாமல் செய்த கெட்டசெய்கையாலும், வாலிப பருவத்தில் மிதமீறிய தாம்பத்தியத்தாலும், வயதான காலத்தில் உடல் சக்தியையும், ஆண்தன்மையையும். ரத்தம் குறைந்து. மனச்சோர்வடைந்து இருப்பவர்களையும் ரிஷி அஜமாமிச லேகியம் சாப்பிடுவதினல் புது சக்தியைப் பெற்று, இல்லற வாழ்க்கையில் சந்தோஷமாக இருப்பதற்கு சிறந்த காயகல்ப மருந்து, சக்தியையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருகிறது.

250 கிராம்:- ரூபா 60/-
500 கிராம்:- ரூபா 110/-
தபால் செலவு ரூபா 10/-

DR T.D. மதுரநாயகம்
(D. A. M Cey, M. Ac. F. Cey)
ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பாராத சந்திப்பு

கிளிநொச்சி செப் 7
கிளிநொச்சி மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் மூர்த்தியும், கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல் குலதுங்காவும் எதிர்பாராத விதமாக ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர்.

திருமணவைபவம் ஒன்றில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

இந்தச் சந்திப்பில் இராணுவ இணைப்பதிகாரி குலதுங்கா மூர்த்திக்கு கைகொடுத்து நாம் பழையவற்றை மறந்து புதிய நண்பர்களாக இங்கு கலந்துகொள்கிறோம் என்றார். (இ-76)

1983 முதல் 87 வரை

# திருமலையில் மட்டும்

# 18 ஆயிரம் வீடுகள் சேதம்

## ரூ. 257 கோடி மொத்த இழப்பு

திருகோணமலை, செப். 7
1983 ஆம் ஆண்டு முதல் இதுவரை திருகோணமலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் 18 ஆயிரம் வீடுகளும் 276 வியாபார ஸ்தாபனங்களும் முற்றுகச் சேதமடைந்துள்ளன.

இத்தகவல்கள் சமூக சேவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின்படி அரசாங்க உடைமைகளுக்கு (கட்டடங்கள், பாதைகள், வாகனங்கள் உட்பட) ஏற்பட்ட அழிவு ரூபா 37 கோடி 90 லட்சமாகும். கோவில்கள், விகாரைகள், மற்றும்! மத ஸ்தாபனங்களுக்கு ஏற்பட்ட அழிவு இரண்டு கோடி ரூபா. வீடுகள், வியாபார நிலையங்களுக்கு ஏற்பட்ட அழிவு 27 கோடி 30 லட்சமாகும். மொத்த அழிவு (1983-1987)- ரூபா: 257 கோடி 20 லட்சமாகும். (உ-150)

## கொளுத்தப்பட்ட ரயில் பெட்டிகள் கொழும்புக்கு இழுத்துச் செல்லப்பட்டன

குருநகர், செப். 7
1983 ஜூலை மாதம் கோண்டாவில் ரயில் நிலையத்தில் வைத்துக் கொளுத்தப்பட்ட ரயில் பெட்டிகள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இப்பெட்டிகளை இழுத்துச் செல்வதற்கென தனியான என்ஜின் ஒன்று கொண்டுவரப் பட்டிருந்தது.

பெட்டிகள் இழுத்துச் செல்லக்கூடிய நிலையில் உள்ளனவா என்பதைக் கண்டறிந்த பின்பே அவற்றைக் கொழும்புக்குக் கொண்டு செல்லத் திணைக்களம் முடிவுசெய்தது.

கடந்த நான்கு வருடங்களாக இந்த ரயில் பெட்டிகள் யாழ் ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

வெள்ளிக்கிழமை கொழும்பில் இருந்து வந்த ஒன்பது ரயில்வேப் பகுதி ஊழியர்களுடன் யாழ் ரயில் நிலையத்தைச் சேர்ந்த மூன்று ஊழியர்களும் சேர்ந்து ரயில் பெட்டிகளை கொழும்புக்கு எடுத்துச் சென்றனர். (இ-51)

## வீதிகளைத் திருத்த நிதிஉதவி

யாழ்ப்பாணம், செப். 7
வடபகுதியில் உள்ள வீதிகளைத் திருத்துவதற்கு நிதியுதவி கிடைக்கவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கான நிதியுதவியை வழங்கவுள்ளது.

வழங்கவென திட்டமிடப்பட்டிருக்கும் தொகை வடபகுதியின் வீதிகளைத் திருத்துவதற்குப் போதுமானதாக இருக்கும் என யாழ்செயலக உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார், (இ-7)

## இப்படியும் ஒரு பாடசாலை

கல்முனை செப் 7
கல்முனைக் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த 7ம் இலக்கக் குடியேற்றக் கிராமத்தில் அமைந்துள்ள அ. த. க. பாடசாலை மாணவர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ அல்லது அதிபருக்கோ இருப்பதற்கு கதிரைகள் கூடக் கிடையாது. எல்லோரும் நிலத்தில்தான் இருக்கின்றனர்.

இது ஒரு புறமிருக்க பாடசாலைக்குரிய காணியிலும், அதிபர் விடுதியிலும அயல் வாசிகள் பலாத்காரமாகக் குடியேறியுள்ளனர்.

இதை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயலாததையிட்டு இக்கிராம வாசிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (ஒ-84)

## சனியன்று இடம்பெற்ற விபத்துகள்!

யாழ்ப்பாணம், செப் 7
கச்சேரி—நல்லூர் வீதியும், நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில் லொறி ஒன்றும் வான் ஒன்றும் மோதிக் கொண்டதில் வான் பலத்த சேதத்துக்குள்ளானது.

வானின் சாரதி எம். ஜெயரத்தினம் பலத்த காயத்துக்குள்ளானார். மற்றும் லொறியில் இருந்த 9 பேர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-ஒ)

★ ★ ★

கல்லுண்டாய் வெளிக்கும் காக்கை தீவுக்கும் இடையில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய இருவர் சனியிரவு யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

தாஸ் (24 வயது) ஊர்காவற்துறை, மனோகரன் (24வயது) அராலி இழக்கு ஆகியோரே காயமடைந்தவர்கள்.

இருவரும் சுயநினைவற்ற நிலையில் இருந்ததால் மேலதிக விவரம் தெரியவரவில்லை (ஒ-7)

## மூதூர் - பொத்துவில் சம்பவங்கள் தொடர்பாக ஈழவர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 7
மூதூர் உதவி அரசாங்க அதிபர் கொலை, மற்றும் பொத்துவிலில் முஸ்லிம் குடியிருப்புக்கள் எரிக்கப்பட்டது போன்ற நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்து ஈழவர் முன்னணி அறிக்கை வெளியிட்டுள்ளது

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
அண்மைக் காலமாக ஈழப் பகுதிகளில் குழுமோதல்களும், திட்டமிட்ட கொள்ளைச் சம்பவங்களும், ஆள்கடத்தல் மற்றும் மிலேச்சத்தனமான கொலைகள்பற்றிய செய்திகளுமே ஓங்கி நிற்கின்றன.

போராட்டச் சக்திகள் தமக்கிடையிலானபிணக்குகளை முடிவுக்குக் கொண்டுவருவதுடன் அவற்றைத் தீர்க்க மரபு தழுவிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

இதன் நிமித்தமே தமிழ்ப்பேசும் மக்களுக்கு நம்பிக்கையையும், சதிகாரருக்கு பதிலடியையும் கொடுக்கலாம். கொள்ளை, ஆள் கடத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கமுடியும்.

தமிழ் பேசும் இஸ்லாமிய மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் சதிகள்-குறிப்பாக மூதூர் உதவி அரசாங்க அதிபரின் கொலைபற்றிய செய்திகள் எமக்கு அதிர்ச்சி கொடுப்பதோடு, பொத்துவில் முஸ்லிம் குடியிருப்புக்கள் எரியூட்டப்பட்டதும் இனவிரோதசக்திகளின் கரம் ஓங்கி நிற்பதையே காட்டுகின்றது

இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-ஒ)

## நாட்டின் அபிவிருத்தி மூன்று வகையானது என்கிறார் உதவி அரசாங்க அதிபர்

கிளிநொச்சி செப். 7
நாட்டின் அபிவிருத்தி மூன்று வகையாக நடைபெறுகின்றது ஒன்று அரசாங்கம் செய்வது. இரண்டு அரசாங்கமும் பொதுமக்களும் சேர்ந்து செய்வது மூன்று பொதுமக்கள் தாமாகச் செய்வது. இவற்றில் அரசாங்கமும் பொதுமக்களும் சேர்ந்து செயற்படுவதற்கு வழி வகுப்பதில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற ஸ்தபனங்களே முதலிடத்தைப் பெறுகின்றன

இவ்வாறு கிளிநொச்சி கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 29 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குணராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

கிளிநொச்சி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களுள் கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் மக்களுக்குச் சேவை செய்வதிலும் தமது சங்கத்தை வளம்படுத்திக் கொள்வதிலும முன்நின்று உழைத்து வருவது பெருமைக்குரியதொன்றாகும் என்றார். (ஒ-76)

## உ அ. அதிபர் பத்மநாதன் விடுதலை

கொழும்பு, செப். 7
திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர் திரு. என் பத்மநாதன் விடுதலை செய்யப்பட்டார்.

அவர் மீதான வழக்கைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்று அரசு சட்டத்தரணி அறிவித்ததைத் தொடர்ந்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எம். டி. யேசுரட்னம் திரு பத்மநாதனை விடுதலை செய்யும் உத்தரவைப் பிறப்பித்தார்.

மட்டக்களப்புச் சிறையில் இருந்து தப்பிய சிலர் பற்றித் தகவல் கொடுக்கத் தவறியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவர் சுற்றவாளி என்று கூறியதைத் தொடர்ந்து இவர்மீதான வழக்கு விசாரணை 1985 இல் இருந்து ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டே வந்தது.

16 - 12 - 83 இல்இவர் திருகோணமலையில்வைத்துக் கைது செய்யப்பட்டார். அப்போது இவர் திருமலை மேலதிக அரசாங்க அதிபராகப் பணி புரிந்து வந்தார். (இ-எ)

## சேவைக்கால கல்வி வகுப்பு

வட்டுக்கோட்டை, செப். 7
யாழ் கல்வித் திணைக்களத்தினால் மனையியல், விவசாயம் தவிர்ந்த ஏனைய தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கல்வி வகுப்பு அக்டோபர் மாதம் 9 ஆம் திகதி யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடத்தப்படவுள்ளது.

இவ்வகுப்பில் உடையமைத்தல். மரவேலை, உலோகவேலை, நெசவு, வனைதல், மோட்டார் பொறித்தொழில், வானொலி பேணல் ஆகிய பாட நெறிகளைக் கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களும் கலந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஜனூப் எம். எம். மன்சூர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-161)

## விற்பனைக்கோ வாடகைக்கோ விடமுடியாது

குருநகர் செப் 7
குருநகர், தொடர்மாடிமனைகளை பெற்றுக் கொண்டவர்கள் அவ்வீட்டினை வாடகைக்கு விடவோ, விற்பனை, செய்யவோ முடியாதென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்விதம் செய்பவர்கள் மேற்படி வீடுகளை இழக்க நேரிடுமென்று குருநகர், தொடர்மாடி வீடமைப்பு அபிவிருத்திச்சங்கம் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

வீடுகளைப்பெற்றுக் கொண்டவர்கள் கிடைத்த வீடுகளில் தங்கி இருக்குமாறும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-51)

மக்கள் முகம்

## மல்லாகம் ஐக்கிய நாணய சங்கம்

யாழ்ப்பாணம், செப். 7
மல்லாகம் ஐக்கிய நாணய சங்கத்தின் புதுவருட நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் திரு. அ. ஸ்ரீ பாஸ்கரன், உபதலைவர்: திரு. மு. ஜே. பி. குணரத்தினம், பொருளாளர் செல்வி உருத்திரபதி முத்துக்குமாரு.

செயற்குழு உறுப்பினர்களாக திருமதி. புஷ்பாலீனஸ், செல்வி மகாலக்ஷ்மி ஐயாததுறை, திரு. சி. ஸ்ரீதரன், திரு. த கிருஷ்ணர், திரு. நா. நடராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ)

இலங்கை வங்கியின்

## பணக் கொடுக்கல்- வாங்கல் சேவை விஸ்தரிக்கப்படும்

## 3 நாள் கருத்தரங்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் 7
இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் பின் பணக் கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்த இலங்கை வங்கி தனது சேவைகளை மேலும் விஸ்தரிக்கவுள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கையாகக் கடன் வழங்கல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான மூன்று நாள் கருத்தரங்கும் பயிற்சி நெறியும் இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட காரியாலயத்தில் ஆரம்பமாகி உள்ளன.

இக்கருத்தரங்கில் வட பிராந்தியத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர்களும், கடன் அதிகாரிகளும் கலந்து சொள்கிறார்கள்.

இப்பயிற்சி நெறியில் போதனாசிரியர்களாக இலங்கை வங்கி வட பிராந்திய உதவி பொது முகாமையாளர் கே. துரைராசா மற்றும் வங்கியன் உயர் அதிகாரிகளான திரு. எம். ஏ. ஜெகநாதன், திரு. எம். கணசரத்தினம், டாக்டர் லோகநாதன் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள். (இ-ஈ)

## விக்கியின் இறுதி ஊர்வலம்

திருகோணமலை, செப் 7
திருகோணமலை நகரசபையின் முன்னாள் தலைவர் இரா. விக்னேஸ்வரனின் இறுதிச் சடங்குகள் திருமலை இந்து மயானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றன. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்ட 25 தனியார் கார்கள் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொண்டன. (உ எ- 150)

## வடக்கு, கிழக்கு. .

(3ம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்த் தலைவர்களுக்குச் செய்த துரோகங்கள்.

இருதரப்பும் இவற்றை மறந்துவிட வேண்டும் இதற்கு தற்போது நல்ல சகுனம் பிறந்துள்ளது. பரஸ்பரம் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்

நீதிக்குப் போராடிய தமிழ் மக்கள் நீதியாக நடந்து கொள்வார்கள், பேரினவாதிகளுக்கு எதிராகப் போராடியவர்கள் ஒருபோதும் மற்றுமோர் பேரினவாதியாக உருவாகாமல் முன்மாதிரியாகத் திகழ்வார்கள். பக்கச்சார்பாக நடக்க மாட்டார்கள் என நம்புகின்றோம்.

தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது தமிழர் அரைவாசி கேட்கிறார்கள் என்று தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரம்தான் இன்று மாற்றுத் திட்டத்தை அமுல் செய்யமுடியாத நிலையை உருவாக்கியுள்ளது.

தமிழர் அதிகாரம் செலுத்தும் சகலவற்றிலும் முஸ்லிம்கள் அதிகாரம் பெறவேண்டும். தமிழர் பெறும் உரிமைகள் சலுகைகளை முஸ்லிம்களும் பெற வேண்டும். ஆனால் அளவில் வித்தியாசம் இருக்கலாம்.

கல்வி, கலாசாரம், தொழில் நுட்பம் ஆகியவற்றில் முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்.

முஸ்லிம் மக்களின் தெளிவின்மை, சந்தேகம் நீக்கப்படல் வேண்டும். இதற்கு தமிழ்க் குழுக்கள் முன்வரவேண்டும். (இ-21)

இடைக்கால நிர்வாகம்:

## உரிமை கோருகிறது முஸ்லிம் காங்கிரஸ்

மட்டக்களப்பு, செப் 7
இடைக்கால நிர்வாக சபையில்முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்படும் பிரதிநிதித்துவம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே வழங்கப்படல் வேண்டும்.

—இக் கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி எம். எச். எம். அஸ்ரப் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :-
இணைந்த மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் விடயங்களை கவனிப்பதற்கு தமிழர் பிரதிநிதித்துவத்தாலோ, சிங்களவர் பிரதிநிதித்துவத்தாலோ முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

முஸ்லிம்களின் விடயத்திற்காக முஸ்லிம்களை முழுமையாகக்கொண்ட ஸ்தாபன மொன்றிற்கே பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில் எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே அதற்குரிய தகைமை இருக்கிறது (உ-21)

## ஆசிரியர் சங்க கூட்டம்

கிளிநொச்சி, செப் 7
இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க கிளிநொச்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை பத்துமணிக்கு கிளிநொச்சி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறும். (உ-76)

## புலிகளின் காரியாலயங்கள் திறப்பு

திருகோணமலை, செப் 7
தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் காரியாலயங்கள் திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் திறக்கப்பட்டுள்ளன நகரில் சாரதா வீதியிலும் ஒரு காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பாலையூற்று, சாம்பல்தீவு, நிலாவெளி, மற்றும் மூதூர் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும் காரியாலயங்கள் திறக்கப்பட்டுள்ளன. (உ-150)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



சின்னத்தம்பி விவேகானந்தன்

பிறப்பு 04-02-1958 ★ இறப்பு 25-07-1987

அன்பின் திருவுருவாய் அறிவில் சுடரொளியாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் சிரிப்பின் நிறைமதியாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரி, உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.




லீலா பேக் ஹவுஸ்

★ சண்டிலிப்பாய்க் கிளை திறப்பு விழா ★

07 - 09 - 1987 (இன்று) திங்கட்கிழமை நண்பகல் 12 - 00 மணி தொடக்கம் 12 - 30 மணி வரையுள்ள சுபவேளையில் மேற்படி கிளைத்தாபனத்தை திருவருள் துணைகொண்டு ஆரம்பித்து நடாத்தவுள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

★ அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★



மார்க்கட் சதுக்கம்,
சங்கானை,

லீலா பேக் ஹவுஸ்
தரமான பாண், பிஸ்கட் தயாரிப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உனது இதயத்தைத் தூய்மைப் படுத்துக. அப்பொழுது சிந்தனைசக்தியும், செயலாற்றும் திறமையும் அற்புதகரமான ரீதியில் பெருகும்.

—ஸ்ரீமத் ஸ்வாமி கெங்காதரானந்தா

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 192/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22078
07.9.1987 த.பெ. இல - 25

## போதும், போதும்; வேண்டவே வேண்டாம்!

தமிழ் மண்ணில் மீண்டும் பேரழிவு ஒன்று ஏற்படுமோ என்று அச்சமுறும் அளவுக்குச் சகல அறிகுறிகளும் தென்பட ஆரம்பித்துள்ளன.

கடந்த நான்கு வருடங்களாக இரத்தத்தில் தோய்ந்து சிவப்பேறிக் கிடக்கிறது ஈழத் தமிழ் மண். மீண்டும் அது இரத்தத்தால் நனையத் தொடங்கிவிடுமோ என்று ஒவ்வொருவர் மனமும் வேதனைப்படும் அளவுக்கு வேண்டத்தகாத சம்பவங்கள் ஆங்காங்கே தலையெடுக்கத் தொடங்கி உள்ளன.

அரசாங்கப் படைகள் ஆயிரம் ஆயிரம் அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்ததால் ஓடிய இரத்த ஆறு சற்று ஓய்ந்திருக்கிறது. அதனைத் திரும்பவும் பாயச் செய்வதற்கு மெச்சிலையே இப்போது சங்கணம் கட்டப்படுகிறது.

இது நிச்சயம் பேரழிவைத் தரும். ஆரம்பத்திலேயே கிள்ளப்படாவிட்டால் தமிழர் சமூகத்தையே அழித்துவிடும். நாமே நமக்குள் அடிபடத் தொடங்கினால், ஒருவரை மற்றவர் கொலை செய்யத் தொடங்கினால், ஈழத் தமிழர் சமுதாயம் நிர்மூலமாகி விடும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இது பேராபத்து மிக்கது.

பழிவாங்கத் துடித்தல், பதவியைப் பெறுவதற்காக மற்றவனை அழித்தல், தாமே சக்தி படைத்தவர்கள் சகல வல்லமையும் உள்ளவர்கள் என்ற இறுமாப்புடன் முடிவுகளை எடுத்தல், போட்டி, பொறாமை, அடக்குமுறை, அராஜகம் என்பனவே இயக்கங்கள் தங்களுக்கிடையில் மோதிக்கொள்ளக் காரணங்களாக இருப்பதுண்டு.

மக்களுக்காக, குறிப்பாக விடுதலைக்காக உழைக்க முனைந்தவர்களுக்கு இவை ஆகா. முன்சொன்ன குணம்சங்கள் விடுதலை இயக்கங்களிடம் மேலோங்குமானால் அவை உண்மையில் அந்தப்பெயரைச் சொல்வதற்கு அருகதை அற்றவை.

பொது எதிரியின் அடக்கு முறைக்கு எதிராக ஒன்றுபட்டு உழைக்க வேண்டியவர்கள் தமக்குள் தாமே அடிபட்டுச் சாவது ஆகுமா?

வேண்டாம், அது வேண்டவே வேண்டாம். மீண்டும் தமிழ் மண்ணில் இரத்த ஆறு ஓடுவதற்கு வாய்க்கால் வெட்டாதீர்கள். கடந்த நான்கு வருடங்கள் ஓடிய இரத்த ஆறு போதும், போதும்!

ஓர் இலட்சியத்துக்காக, விடுதலைக்காக மக்கள் செத்து மடிந்தால் அது பெறுமதியானது. இயக்க வேறுபாட்டுக்காக இரத்த ஆறு ஓட அனுமதிக்கலாமா?

இயக்கங்கள் தமக்கிடையே மோதிக் கொள்ள எழுந்தால், அதில் ஈடுபடுவனவற்றை, உண்மையான விடுதலை இயக்கங்கள் என்று மக்கள் கருதமாட்டார்கள். மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்காமற் போகும் என்பதும் நிச்சயம். அதனைக் கருதியாவது மோத நினைக்காதீர்கள், இயக்கங்களே! மக்களின் மதிப்பை இழந்த எந்த ஸ்தாபனமும் உய்ந்ததில்லை என்பதை கருத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

இயக்கங்கள் தமக்கிடையே மோதிக் கொண்டால் யாருக்கு நஷ்டம், யாருக்கு லாபம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

நஷ்டம் உங்களுக்கு மட்டுமல்ல தமிழ் இனத்துக்கும் தான். தமிழ்ச் சமூகத்தில் இளம் சந்ததி தமக்குள் அடிபட்டு இறந்தால் எத்தனையோ சந்ததிகள் இல்லாமற் போய் விடாவா?

நீங்கள் மோதிக் கொண்டால் முழு லாபமும் எதிரிக்குத்தான். தமிழ் இளைஞர்களை அழித்தால் தமிழருக்குப் பிற்சந்ததி இராது என்று நயவஞ்சகத்துடன் செயற்பட்ட எதிரிக்கு கஷ்டம் எதுவுமே இல்லாமற் கிடைத்த வெற்றியாகி விடும்— லாபமாகி விடும்.

இயக்கங்களே! அவற்றில் அங்கம் வகிக்கும் இளைஞர்களே!! நன்றாகச் சீர்தூக்கிப் பாருங்கள். நீங்கள் உங்களுக்குள்ளேயே மோத ஆரம்பித்தால் அதனால் ஏற்பட இருக்கும் விளைவுகளை உங்கள் மனத்தராசில் நிறுத்துப் பாருங்கள்.

லாபத்தின் பக்கம் வெறுமனேயும், நஷ்டத்தின் பக்கம் தட்டு கொள்ளாத அளவுக்கும் நிறைந்து காணப்படும்.

அந்த நஷ்டங்களை நீங்கள் வாங்கிக் கொண்டாலும், இறுதியில் முழு நஷ்டமும் தமிழ் மக்களுக்கே இளைஞர் சக்தியால் ஊட்டமுறப் பெறாத எந்தச் சமூகமும் விடுதலை பெறுவது என்பது இயலாத காரியம்.

உங்கள் மனதில் சற்று சகிப்புத் தன்மையை வளர்த்தெடுங்கள். எந்த இனத்தின் விடுதலைக்காகப் போராடத் துணிந்தீர்களோ, தியாகங்கள் செய்தீர்களோ அந்த இனத்தின் வாழ்வுக்காக மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதுவே இன்றைய தேவை. அதுவே உங்களுக்கும், இனத்துக்கும் நல்லதைச் செய்யும். உங்களையும் இனத்தையும் காப்பாற்றும்.

ஒன்று செய்வீர் அதுவும் நன்று செய்வீர். வீணே உமது சகோதரர்களைக் கொன்றொழிக்க நினையாதீர்!

# இந்திய அமைச்சரவை வெகுவிரைவில் மாற்றம்

## புதிய ஆளுநர்களும் நியமிக்கப்படுவர்

புதுடில்லி, செப்.6

அமைச்சரவை மாற்றம், ஆளுநர்கள் நியமனம் ஆகியவற்றை எந்த நேரத்திலும் பிரதமர் காந்தி அறிவிக்கலாம்.

—இப்படி புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த மத்திய அமைச்சரவை மாற்றத்தின் போது புதியவர்களுக்கு இடமளிக்கப்படுமா? அனுபவஸ்தர்களுக்கு இடமளிக்கப்படுமா? என்பது காங்கிரஸ் வட்டாரங்களுக்கே தெரியாமல் உள்ளது.

பிரதமர் காந்தி தான் இதைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

மத்திய அமைச்சரவையில் இருந்து நீக்கப்படுவோர் சிலர் ஆளுநர்களாக நியமிக்கப்படும் வாய்ப்பும் உண்டு.

ஐந்து மாநிலங்களின் கவர்ணர்களின் பதவிக் காலம் முடிவடைந்து விட்டது.

தமிழ்நாடு கவர்னர் எஸ். எல். குரானாவின் பதவிக்காலம் சென்ற 31 ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது.

கர்னாடகம், ஹரியானா மாநில கவர்னர்களின் பதவிக் காலமும் முடிந்து விட்டது

மகாராஷ்டிர கவர்னராக இருந்தவர் உப ஜனாதிபதியாகி விட்டார்.

கேரள கவர்னர் பா. இராமச்சந்திரனின் பதவிக்காலம் அக்டோபரில் முடிகின்றது. (ஒ-எ)

பாகிஸ்தான் எல்லையிலுள்ள

## 65இந்திய கிராமங்களில் இரவு நேர ஊரடங்கு

புதுடில்லி, செப் 6

பாகிஸ்தான் எல்லைப் புறத்தை ஒட்டியுள்ள 65 இந்தியக் கிராமங்களில் இரவு நேர ஊரடங்குச் சட்டத்தைப் புதுடில்லி அரசு பிறப்பித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவல் செய்வதைத் தடுப்பதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

## 5 ஈரானியர்களை வெளியேற உத்தரவு

### குவைத் அரசு பணிப்பு

டுபாய், செப் 6

ஐந்து ஈரானிய ராஜதந்திரிகளை ஏழு தினங்களுக்குள் வெளியேறும்படி குவைத் அரசு உத்தரவிட்டுள்ளது.

குவைத் பிரதேசத்தில் 'ஸில்க்வோர்ம்' நீண்ட தூர ஏவுகணைத் தாக்குதலை ஈரான் மேற்கொண்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

குவைத் வெளியுறவு அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

ஏவுகணைத் தாக்குதல், ஷெல்த் தாக்குதல் ஆகியவற்றை ஈரான் குவைத் மீது மேற்கொண்டு வருகின்றது' — இப்படி குவைத் ஐ. நா. சபையிடம் ஏற்கனவே முறையிட்டிருந்தது.

வளைகுடாவில் பதற்ற நிலையை அதிகரிப்பதில் ஈரான் ஈடுபட்டுவருகின்றது என்றும் குவைத் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஒ-எ)

## தொடர்ந்து போராட "கிரிங்கோ" முடிவு!

மணிலா, செப் 7

கடந்த வாரம் பிலிப்பீன்ஸில் தோல்வியில் முடிந்த புரட்சியை நடத்திய 'கிரிங்கோ' என்றழைக்கப்படும் ராணுவ அதிகாரி கேர்ணல் ஹொனாஸன் என்பவரை சரணடையும்படி ஆயுதப் படைகளின் தளபதி பிடல் ராமோஸ் கேட்டிருக்கின்றார்.

கேர்ணல் ஹொனாஸன் தற்போது தலைமறைவாக இருக்கின்றார்.

ஜனாதிபதி கொறஸோனின் ஆட்சிக்கு எதிராகத் தொடர்ந்து போராடப் போவதாக கேர்ணல் ஹொனாஸன் இரகசிய வானொலி ஒன்றின் மூலம் கடந்த சனிக்கிழமை அறிவித்தார்.

மார்க்கோஸின் பாணியில் ஊழல் நிறைந்த ஆட்சியை கொறஸோன் நடத்தி வருகின்றார்—

இப்படி கேர்ணல் ஹொனாஸன் அப்பேச்சில் குற்றஞ்சாட்டினர். (ஒ-எ)

## கைதிகள் பரிமாற்றம்

கேப்டவுண், செப். 6

தென் ஆபிரிக்காவும் அங்கோலாவும் கைதிகளைப் பரிமாற்றம் செய்ய உள்ளன.

மொஸாம்பிக்கில் இப்பரிமாற்றம் நாளை திங்கள் (7-9-87) இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது

தென் ஆபிரிக்க அரசு 130 கைதிகளை விடுவிக்கும். இவர்களில் ஒருவர் பிரெஞ்சுப் பிரசை. இன்னொருவர் டச்சுப்பிரசை. ஏனையோர் அங்கோலாப் பிரசைகள்.

இதற்குப் பதிலாக அங்கோலா தென் ஆபிரிக்க இராணுவக் கப்டன் ஒருவரை விடுவிக்கும். (ஒ-எ)

## புன்கூட்டியே வெளியாகும் செய்திகள்

வெள்ளை மாளிகையில் இருந்து செய்திகள் முன்கூட்டியே வெளியாகி விடுகின்றன.

இதனால் அமெரிக்காவின் திறமைக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஏஜன்ஸி இக்குற்றச்சாட்டை அதிபர் றேகன் தலைமையிலான நிர்வாகத்தின் மீது சுமத்தியிருக்கின்றது (இ-எ)

## வெளி உலகில்

குயிலர் வளைகுடா விஜயம்:

## ஈரானும் ஈராக்கும் வரவேற்றுள்ளன

ஐ. நா, செப் 6

ஐ நா. பொதுச் செயலாளர் பெரெஸ்டி டி குயிலர் வளைகுடாவுக்கு விஜயம் செய்வதை ஈரானும் ஈராக்கும் வரவேற்றுள்ளன.

பொதுச் செயலாளர் விஜயத்தின் போது நிதானத்தைக் கடைப்பிடிக்கப்போவதாக ஈரான் அறிவித்திருக்கின்றது.

அதேநேரத்தில் தெஹ்ரான் வானொலி ''ஈராக்கை ஆக்கிரமிப்பு நாடாக ஐ. நா. அறிவிக்கவேண்டும்''– என்று கோரியுள்ளது.

ஐ நா. ஈராக்குக்குச் சார்பாகவே நடந்து கொள்ளுவதாகவும் தெஹ்ரான் வானொலி குற்றஞ்சுமத்தியுள்ளது.

இதனிடையில் ஐ நா. பாதுகாப்புச் சபையின் யுத்தநிறுத்தக் கோரிக்கையை ஈரான் ஏற்க வேண்டும். அதுவரை ஈரானின் பொருளாதார இலக்குகள் மீது தாக்குதல்களை ஈராக் நடத்தும் என்று ஈராக் அறிவித்துள்ளது. (ஒ-எ)

## மகாஸே தஞ்சம்

கம்பாலா, செப். 6

பதவி கவிழ்க்கப்பட்ட புருண்டி நாட்டின் ஜனாதிபதி மகாஸே உகண்டாவில் தஞ்சம் அடைந்தார்.

கம்பாலாவில் அவருக்கு தற்காலிக அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## மொரிஷியஸ் பிஜியாக மாறுது

போர்ட்செய்த், செப்6

இன்னொரு பிஜியாக மொரிஷியஸ் மாறுது.

மொரிஷியஸ் பிரதமர் அனிருட் ஜகன்னாத் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று பிரதமரான திரு. ஜகன்னாத் இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார். (ஒ-எ)

## மூவர் கைது

அயர்லாந்துக்குப் பொறுப்பான பிரிட்டிஷ் அமைச்சரைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் கூறப்படும் 2 ஆண்களும் ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டனர்.

மேற்கு லண்டனில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அனைவரும் 20 வயதுக்கு உட்பட்டவர்கள். (ஒ-எ)

உளவு பார்த்ததற்காக

## டென்மார்க் பிரசைகள் இருவருக்குச் சிறை!

வார்ஸோ, செப் 6

உளவுவேலை பார்த்த இரண்டு டென்மார்க் பிரசைகளுக்கு போலந்து இராணுவ நீதிமன்றம் ஒன்று சிறைத்தண்டனை விதித்தது.

வர்த்தகர் ஒருவருக்கு 9 வருடச் சிறைத்தண்டனையும் மாணவன் ஒருவனுக்கு 7 வருடச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இருவரும் நவீன கமரா ஒன்றின் மூலம் போலந்து நாட்டின் முக்கிய இராணுவ நிலையங்களைப் படம் பிடித்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

ஐந்து மாதங்களுக்கு முன்னர் இவர்கள் கைது செய்யப்பட்டனர்

இவர்கள் மீதான இராணுவ நீதிமன்ற விசாரணை மூன்று தினங்களாக நடைபெற்றது.

டென்மார்க் உளவு ஸ்தாபனத்துக்காகப் பணிபுரிந்ததாக இரண்டு பேரும் விசாரணையின் போது ஒப்புக்கொண்டனர். (ஒ-எ)

## பூட்டாசிங் ஜோதிபாசு பேச்சுவார்த்தை

புதுடில்லி செப். 6

டார்ஜிலிங் வாழ் கூர்க்கா பிரச்சினை குறித்து மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு இந்திய மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங்குடன் பேச்சுக்கள் நடத்தினர்.

அப்போது பொது உடன்பாடு ஒன்று காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் பாசு பின்னர் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினர். (இ-எ)

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

## இரண்டு மாதங்களுக்கு ஒருமுறைகூட வேண்டும்

### இது தான் நடைமுறை

கொழும்பு, செப் 7

நாட்டில் உள்ள பல்கலைக்கழக உபவேந்தர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை பல்கலைக் கழகம் ஒன்றில் கூடிக் கலந்துரையாடுவர்.

இது ஒரு நடைமுறை. இதன்படி உபவேந்தர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கலந்துரையாடல் ஒன்றை நடத்த யாழ்ப்பாணம் வர முடியாமற் போய் விட்டது.

இனப்பிரச்சினை மோதல்களே இதற்குக் காரணம்.

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் தங்கள் முதலாவது கலந்துரையாடலை யாழ் பல்கலைக் கழகத்தில் நடத்தத் தீர்மானித்தனர்.

அதன்படி கடந்த சனிக்கிழமை உபவேந்தர்கள் யாழ்ப்பாணத்தில் கூட்டம் நடத்தினர்.

### பிறர்---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வந்த இடைஞ்சல்களைத் தனக்கு வந்த இடைஞ்சல் எனக் கருதி ஓடிச் சென்று உதவி ஒத்தாசை செய்தும் தாய், தகப்பன், குரு முதியோர் முதலியோரைக் கனம் பண்ணி மற்றவர்களின் இதயம் குளிரச் செய்யும் நல்ல சொற்களையே பேச வேண்டும்.

உள்ளொன்று வைத்துப் புறம்ஒன்று பேசா இதயம் படைத்தவர்களாயிருக்க வேண்டும். ஒருவரையும் உனக்கு வேறாகப் பார்த்து இகழாது மற்றவர்களிடமுள்ள நிறைவைப் பார்ப்பதேயில்லாது குறைவை ஆளாதே, தொண்டு செய்யும் போது தொண்டுக்குப் பொறுப்பானவரையோ, தொண்டையோ கருதாதும் அவரெனக்கிதை எப்போதாவது திருப்பிச் செய்யக்கூடும் என்ற கருத்தும் இல்லாமல் சுயநலமற்ற இறை தொண்டாகச் செய்யவேண்டும். இதையே தெய்வீக வாழ்வென அழைகின்றோம் — என்றார்.

## சமய சந்நிதிகள்

### கும்பாபிஷேகம்

திருநெல்வேலி கேணியடி அருள்மிகு ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம், செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி யாழ்பல்கழக பதிவாளர் திரு வி. என். சிவராஜா திரு. இ ஜெயராஜ், சோ பத்மநாதன் முதலியோர் கும்பாபிஷேகத்தின்போது நிகழ்ச்சியில் உரையாற்றுவர். (உ)

### பட்டிமண்டபம்

ஊரெழு மீனாட்சி அம்மன் தேவஸ்தான இலக்கிய விழாவில் இன்று ''வீரத்தில் விஞ்சிய இலங்கைப் பாத்திரம் கும்பகர்ணனா? இந்திரசித்தனா?'' என்ற தலைப்பிம் பட்டிமண்டபம் நடைபெறும்.

நடுவராக சம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் கடமையாற்றுவார். கும்பகர்ணன் கட்சிக்காக புலவர் ஈழத்துச் சிவானந்தன், காரை செ. சுந்தரம் பிள்ளை, திரு. தணிகாசலம் ஆகியோரும்.

இந்திரசித்தன் கட்சிக்காக பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை, திரு. க. நாகேஸ்வரன், திரு. இ. இந்நந்தகுமார் ஆகியோரும் வாதிடுவர். (உ)

### புனர் வாழ்வு குறித்து ஆராய்வு

திருகோணமலை, செப் 7

திருகோணமலை மாவட்டத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருட்டு ஆராய்வதற்காக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஒஸ்டின் பெர்னாண்டோ சுற்றுலாவாக இரு மாவட்டத்துக்கு விஜயம் செய்தார். (உ)

## முஸ்லிம்கள் விரும்பும் சலுகைகளை நாம் நிச்சயமாக வழங்குவோம்

### புலிகள் பிரமுகர் சொல்கிறார்

கல்முனை, செப். 7

''கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை நாம் நிச்சயம் வழங்குவோம். சிறுபான்மையினர் கேட்பதில் ஒருவீதமேனும் கூட்டிக் கொடுத்தால்தான் ஒற்றுமை வளரும்.''

அக்கரைப்பற்று 'னைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளன உறுப்பினர்கள், புலிகள் இயக்கப் பிரமுகர்கள் ஒன்று கூடிய ஆலோசனைக் கூட்டமொன்று அக்கரைப்பற்று சின்னப்பள்ளிவாசலில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் புலிகள் இயக்க முஸ்லிம்-தமிழ் மக்கள் இணைப்புப் பொறுப்பாளரும், கல்முனைப் பிரதேச புலிகள் பொறுப்பாளருமான திரு. ரமணன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ரமணன் மேலும் பேசுகையில் கூறியதாவது:–

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் தமிழ் பேசும் மக்களின் போராட்டமாகும். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் நடாத்தப்படப் போகும் நிருவாகத்தில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பங்காளிகளாவர்.

ஒடுக்கப்பட்ட இனங்களுக்காக போராடும் எமது தற்போதைய ஆயுதம் சயனைற் குப்பியும், மக்கள் ஒற்றுமைப் பலமும்தான் நாங்கள் உங்களுக்காகவே சயனைற் குப்பிகளை கழுத்தில தொங்க விட்டுள்ளோம். நாங்கள் மக்களின் நல்வாழ்வுக்கு மரணத்தைக் கூட தழுவ ஆயத்தமாக உள்ளோம்.

இன்றைய இந்த நிலைக்குக்கூட முக்கிய காரணம் புலிகளின் போராட்டமேயாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

''முஸ்லிம்களாகிய நாங்கள் எங்கள் பிரச்சினைகளுக்கு புலிகளின் நிருவாகத்தை அணுகுவோம்'' என அங்கு கூடியிருந்த முஸ்லிம்கள் ஏகோபித்த முறையில் கூறினர். கூட்டத்தில் மட்டு. அம்பாறை புலிகள் பொறுப்பாளர் திரு. டயஸும் கலந்து கொண்டார் (ஒ-84)

## நற்பண்புகளைவளர்க்கும் ஆலயம் பாடசாலை

### பிரதம கல்விஅதிகாரி உரை

சொக்குவில், செப். 7

''பாடசாலை ஒரு வியாபார ஸ்தலமல்ல. அது ஓர் ஆலயம். அங்கு தலைமைத்துவம் வளர்க்கப் படுவதோடல்லாமல் பல பண்புகளும் வளர்க்கப்பட்டு, ஒரு பூரண மனிதன் உருவாகப்படுகின்றான் இவ்வகையில் பாடசாலைகள் 'ரியூட்டரி'களிலிருந்து பெருமளவு மாறுபடுகின்றன.

—இவ்வாறு சொக்குவில் இந்துக்கல்லூரியில் இடம் பெற்ற மாணவர் தலைமைத்துவப் பயிற்சி நெறிக் கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்ச்சியில தலைமைதாங்கிய பிரதம கல்வி அதிகாரி திரு. க. சந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

புதிய தவணை முதல் அமுலபடுத்தப்படும் இருநேரப்பாடசாலை முறையைப் பயன்படுத்தி—விளையாட்டு மைதானங்களிலும் கூடிய நேரத்தைச் செலவழித்து—அதன் மூலம் தலைமைத்துவப் பண்பை வளர்க்க வேண்டும். தேசிய விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம், நம் நாட்டுப் பண்பிற்கேற்ற தலைமைத்துவத்தை வளர்க்க முடியும்— இவ்வாறு அவர் கூறினார். (உ-69)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறம் விளைவுகூடம், பச்சைச்சந்தனம், மைசூர்ச்சந்தனம், No. 1 குங்குமப்பூ, ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைத் திரவியங்கள் போன்ற சகல பொருள்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

07 - 09 1987 திங்கட்கிழமை

* அபிஷேகப் பொருள்கள்
* புதுமனை அத்திவாரப் பொருள்கள்
★ நாள் சரக்குகள்
* விவாக முகூர்த்தப்பொருள்கள்
★ கோவில் சங்காபிஷேகப் பொருள்கள்
* கும்பாபிஷேகப் பொருள்கள்
* அஷ்டபந்தன மருந்து

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

★ மன்னாரில் எண்ணை அகழ்வாராய்ச்சி
★ திருமலையில் எண்ணைக்குதம் திருத்துதல்

# இலங்கை - இந்தியா கூட்டு நடவடிக்கை!

புதுடில்லி, செப். 7

★ வடமேற்கு மன்னார் கரையோரப் பகுதியில் எண்ணை அகழ்வாராய்ச்சி வேலைகளை மீண்டும் கூட்டாகத் தொடங்குதல்.

★ திருகோணமலை, சீனன்வாடிப்பகுதியில் பாவிக்கப்படாமல் உள்ள 100 எண்ணைக் குதங்களைக் கூட்டாகத் திருத்துவது.

இந்த இரண்டு விஷயங்களும் இன்று திங்கள் புதுடில்லியில் ஆரம்பமாகும், இந்திய-இலங்கைக் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக் கூட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறும் என்று தெரியவருகின்றது.

ஐந்து ஆண்டுகால இடைவெளியின் பின்னர் இந்திய-இலங்கைக் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு இன்று புதுடில்லியில் கூடுகின்றது.

இரண்டு தினங்கள் இக்குழுவின் கூட்டம் நடைபெறும்.

இருதரப்பு வர்த்தக உறவுகள், வன்செயலால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனர் நிர்மாணத்துக்கு இந்தியாவின் உதவி ஆகிய விஷயங்கள் இப்பேச்சுக்களில் இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி, எண்ணைக்குத திருத்தவேலைகளை இரு நாடுகளும் கூட்டாக மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடாவில் இந்திய எண்ணை இயற்கை வாயு கமிஷன் எண்ணை அகழ்வாராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

வடமேற்கு மன்னார் கரையோரமாக எண்ணை அகழ்வாராய்ச்சியில் லங்கை அரசு ஈடுபட்டது ஆனால் அதுவெற்றி அளிக்கவில்லை.

ஆனால் இந்தியா தனது பகுதியில் மேற்கொண்ட ஆராய்ச்சி வெற்றி அளித்தது. (உ-எ)

## அந்தவதந்தியில் உண்மையில்லை

யாழ்ப்பாணம், செப் 7

பன்னார் பிரதேசத்தில் எமது அமைப்பைச் சேர்ந்த தேமூர் தவம் கொல்லப்பட்டதாகப் பரப்பப்பட்ட விசமத்தனமான வதந்தியில் எதுவித உண்மையும் இல்லை

- இவ்வாறு ஈழப் புரட்சி அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## இன்று கண்டாமணி ஒலிக்கும்

யாழ்ப்பாணம், செப். 7

வடகோவை சாந்தி துர்க்கா தேவஸ்தான கண்டாமணி ஒலித்தல் ஆரம்ப விழா இன்று நடைபெறும்.

வலி கிழக்கு உதவி அரச அதிபர் மாலை 5 மணிக்கு மணியை ஒலிக்கச் செய்வார். (உ-7)

## இராணுவ நீதிமன்றில் கடற்படைச் சிப்பாய்

கொழும்பு, செப். 7

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய முயற்சித்ததாக இலங்கைக் கடற்படைச்சிப்பாய்ரோஹண டி சில்வாமீது குற்றஞ் சாட்டப்பட உள்ளது.

இவ்வழக்கு இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட இருக்கின்றது.

கடற்படைச் சட்டத்தின் கீழ் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு சிப்பாய் ரோஹண டி சில்வா உட்படுத்தப்பட வேண்டுமென்று சட்டமாஅதிபர் சிவா பசுபதி கடற்படைத் தளபதிக்கு அறிவித்து இருக்கின்றார். சிரேஷ்ட அரசு சட்டத்தரணி ஒருவர் அரசு தரப்பில் வழக்கு விசாரணையின்போது ஆஜராவார். (உ-எ)

## கடற்படை முகாமை படம் பிடித்தோர் கைதாகி விடுதலை

காரைநகர் செப் 7

காரைநகர் கடற்படை முகாமை படம் பிடித்த இரு இளைஞர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இச்சம்பவம் கடந்தவியாழக்கிழமை நடைபெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் முகாமைபடம்பிடித்தனர். அச்சமயம் கடற்படையினர் இவர்களைக் சூழ்ந்து கைது செய்து ஹெலி மூலம் அவர்களை கோட்டை முகாமுக்குச் கொண்டு சென்றனர். பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டனர். (உ-73)

## இடைக்கால---

(1-ம் பக்கத் தொடர்ச்)

பான பிரதிநிதித்துவம் குறித்து அம்பாறை, சேருவில பாராளுமன்ற உறுப்பினர்கள், திருமலை மாவட்ட அமைச்சர் ஆகியோரின் கருத்துக்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாகவும் - அம்பாறை திருமலை ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த இருவர் பெயர்கள் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதே நேரம் அரச தரப்பு நியமனம் ரு தமிழர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தும் அரச மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இடைக்கால நிர்வாக சபையில் 13 முதல் 5 பேர் வரை இடம் பெறுவர் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

கூட்டணி-2, விடுதலைப் புலிகள்-3, அரச தரப்பு-4, ஏனைய நான்கு இயக்கங்கள் - தலா 1 என்ற எண்ணிக்கையில் 13 அடங்கும் அரச தரப்பில தமிழர் நியமிக்கப்பட்டால் இவ் எண்ணிக்கை 15 ஆக அதிகரிக்கும்,

இச்சபையில் இந்திய அதிகாரிகள் இருவர் அங்கம் வகிப்பது நல்லது என்ற அபிப்பிராயமும கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகிறது. (உ-21)

## அச்சுக் கோப்பவர்கள் உடனே தேவை

உதயன் - சஞ்சீவி அச்சகப்பகுதியில் அனுபவமும், ஆற்றலும் சுறுசுறுப்பும் உள்ள அச்சுக் கோர்ப்பவர்கள் உடன தேவை.

விண்ணப்பத்துடன் நாளை காலை முதல் பிற்பகல் 3 மணி வரை நேரில வரவும்.

முகாமையாளர்,
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## வரவேற்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப் 7

இன்று நடைபெற இருந்த லங்கா ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியின் முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு வைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாணவ மன்றம் இவ்வாறு அறிவித்துள்ளது. (உ-7)

## காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், செப் 7

சல்லுண்டாய் வெளிக்கும் காக்கை தீவுக்கும் இடையில் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த தாஸ் நேற்று முன்தினம் நள்ளிரவு மரணமானார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 24 வயதான தாஸின் சடலத்தை அவரது உறவினர்கள் நேற்று பொறுப்பேற்றனர்

(முன்னர் வந்த செய்தி 4ஆம் பக்கத்தில்) [உ-7]

## வவுனியாவில் ஹர்த்தால்

வவுனியா, செப் 7

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மூவர் சுட்டுக் கொல்லப்பட்டும், ஒருவர் படுகாயம் அடைந்ததையும் அடுத்து வவுனியா நகரின் கடைகள் யாவும் மூடப்பட்டன

சறுப்புக் கொடிகள் வாகனங்கள், கடைகளில் பறக்க விடப்பட்டன. (உ-164)



வவுனியாவில் படுகொலையான புலிகள் கப்டன் ...னத்தின் பூதவுடல் யாழ் நகரில் நேற்று அஞ்சலிக்கு வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (உ)

வாசுதேவா விடுத்துள்ள அறிக்கை:

# இலங்கை - இந்திய ஒப்பந்தம்; புளொட்டிற்கு உடன்பாடு இல்லை

## உரிமை கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

மட்டக்களப்பு, செப் 7

தமிழ்ப்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் சமாதானம் திணிக்கப் பட்டுள்ளது இந்நிலையில் எமது மக்கள் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்

எமது சுய நிர்ணய உரிமை கிடைக்கும்வரை போராட்டம் தொடரும். அதேநேரம் அந்நிய நாடுகள் எம் மண்ணில் தளம் அமைக்கும் நோக்கத்திற்கு எதிராகவும் போராடுவோம் என உறுதியளிக்கிறோம்

—மேற்கண்டவாறு 'புளொட்' செயலதிபர் உமா மகேஸ்வரன் சார்பில் அரசியல் செயலாளர் இரா வாசுதேவா ''கழகத்தின் இன்றைய அரசியல் நிலை' குறித்து பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய ஒப்பந்தம் தமிழ்ப்பேசும் மக்கள் அல்லது தமிழ்த் தலைவர்களினால் ஏற்படுத்தப்பட்டதல்ல

இது தேசிய இனத்திற்கான தீர்வல்ல என்பதே எமது நிலைப்பாடு.

இந்த ஒப்பந்தத்திற்கும் தீர்விற்கும் நாம் உடன்பாடோ, பொறுப்போ அல்ல

நாம் தொடர்ந்தும் சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் சமூக பொருளாதார அரசியல் மாற்றத்திற்காகத் தொடர்ந்து போராடுவோம்.

இப் போராட்டத்திற்கான அமைப்புகளை புனரமைக்கும் அதேவேளையில், மக்களின் உடனடித் தேவைகளை உணர்ந்து புனர்வாழ்வு, பொருளாதார வளர்ச்சியிலும் உடனடியாக முன்னுரிமை கொடுத்து, கழகத்தை அதில் ஈடுபடுத்துவோம்.

முஸ்லிம் மக்களின் கலை, கலாசார, சமய உரிமைகளை ஏற்றுக்கொள்வதுடன் கிழக்கு-இலங்கை இஸ்லாமிய மக்கள் மத அடிப்படையிலான கலை, கலாசாரங்களை இறுக்கமாகக் கொண்ட ஓர் தனித்துவமான சமூகம் என்பதையும் அங்கீகரிக்கின்றோம்.

எமதுபோராட்டத்திற்கு பல வகையிலும் உதவிய அனைவருக்கும் நன்றி.

—இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (உ-21)

## ஒரு மாத காலத்தில் என் பணி தொடரும்

### லலித் நம்பிக்கை

கொழும்பு, செப். 7

இன்னும் ஒருமாதத்தில் பணியாற்றத் தொடங்கி விடுவேன்.



தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி முன்கண்டவாறு கொழும்புச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இன்னும் ஒரு பெரிய சத்திர சிகிச்சைக்கு அமைச்சர் ஆளாக வேண்டியிருக்கின்றது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் அமைச்சரின் அறையைச் சுற்றி கஜப படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் தானியங்கித் துப்பாக்கிகளுடன் இரவு பகலாகக் காவல் புரிந்து வருகின்றனர்

கிரனேட் தாக்குதலின் பின்னர் வயதானவர் போல் அமைச்சர் தோற்றமளிக்கின்றார்.

இரண்டு அடிகள் நடந்தாலும் அவர் களைத்து விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ-எ)

## குருநகர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று திருடப்பட்டுள்ளதாகவும் புகார்செய்யப்பட்டது

இதேவேளை சனி இரவு கடை ஒன்றின் பின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த திருடர் கடையில் வைக்கப்பட்டிருந்த பணம் 3 ஆயிரத்து 600 ரூபா, மோதிரம் ஒன்று தூக்கணத்துடன் கூடிய ஒரு சோடி தோடு என்பனவற்றைத் திருடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர், தண்ணீர்த் தாங்கி வீதி, பிரான்சிஸ் பாலா என்பவரது சைக்கிள் கடையிலேயே மேற்படி திருட்டு நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-51)

## குட்டிமணி--

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இரத்த வெள்ளத்தில் அவர் பிணமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

கொலையுண்டவரின் தந்தை சின்னரத்தினம் வல்வைப் பொலீஸ் கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து வல்வை சார்ஜண்ட் திரு. அந்தோனிப்பிள்ளை தலைமையில் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

நீதிவான் ஜி வி. சுப்பிரமணியம் விசாரணை நடத்தினார்.

அங்கு இறந்தவரின் மனைவி திருமதி ஞானலிங்கம் சாட்சியமளித்தார்.

பிரேத பரிசோதனை யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

டாக்டர் செல்வி. சாரத்தினம் பிரேத பரிசோதனை நடத்தினார்

'கனமான இரும்புப் பொல்லால தாக்கப்பட்டு இரத்தப் பெருக்கு ஏற்பட்டதால் மரணம் சம்பவித்ததாக'' அவரின் மரண அத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

இதையடுத்து பதில் நீதிபதி ஞானலிங்கத்தின் மரணம் கொலை எனத் தீர்ப்பளித்தார். (உ-160)

## அவசர---

(1ம் பக்கத் தொடற்சி)

இப்பணம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 2 ஆயிரம் வீடுகளின் உரிமையாளர்களுக்கும் வழங்கப்படும் என்றும் செயலாளர் அறிவித்தார்.

மிகுதிப் பணம் பாடசாலைக் கட்டடங்களைத் திருத்தப் பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## தேர்தல்--

(1ம் பக்கத் தொடற்சி)

அடுத்தவாரம் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார்.

மாகாணசபை போன்ற அமைப்புக்களுக்கான தேர்தல்களை எப்படி நடத்துவது என்பதை நேரில் ஆராய்ந்தறியவே அவர் இச்சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவிருக்கின்றார்.

## தேடப்படும்---

(1ம் பக்கத் தொடற்சி)

இரண்டு வாரங்களுக்கு முன்னர் முதல் தடவையாக இவர் விசாரிக்கப்பட்டார். இரண்டாவது விசாரணை மூன்றரை மணிநேரம் நீடித்தது.

அப்போது அந்த இலங்கைப் பிரமுகர் அதிர்ச்சி ஊட்டக்கூடிய தகவல் ஒன்றை பொலிஸாரிடம் வெளியிட்டாராம்.

கொழும்பில் உள்ள 'தேசப்பற்று' இயக்கம் ஒன்றுக்கு நிதி உதவி செய்து வருவதும் இந்த விசாரணையின்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

இப்படி லண்டன் செய்தி ஒன்று கூறுகின்றது. (உ-எ(

## இந்திய....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளை போன்ற சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றன.

இத்தகைய சமூக விரோத செயற்பாடுகளுள் இந்திய சமாதானப படை அணை போகின்றது அதனால் இப்படை மீது நாம சந்தேகம் கொள்ள வேண்டி உள்ளது.

மேற்படி சமூகவிரோத செயற்பாடுகளில இருந்து மக்களைப்பாதுகாக்க நாம் பாதுகாப்புக் குழுக்களை அமைத்தோம்

இந்தக் குழுக்களின் உறுப்பினர்கள தாக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்களை தாக்கியோருக்கு அவ்வேளை இந்திய சமாதானப் படையினர் பாதுகாப்பு வழங்கியிருக்கின்றார்கள்

இத்தகைய செயற்பாடுகள் துரோகிகளுக்கு துணைபோவதாக இருக்கின்றன

இந்த சமூக விரோத சக்திகள் பாரிய ஆயுங்களுடன் செயற்படுகின்றன

இதற்கு எதிராக முழுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கவே மறியற் போரை இன்று நடத்துகிறோம்

இதே வேளை எமது ஆயுதங்களைப் பறித்து விட்டு ஸ்ரீலங்கா அரசு இன அடக்கு முறையை மோசமாக அவிழ்த்து விட்டிருக்கிறது

கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான அடாவடித்தனம் ... வருகிறது

## கடத்தப்பட்ட....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரன் (17வயது), கொக்குவில் மேற்கு நாகராஜா ஜெயக்குமார் (19வயது) ஆகியோரே அந்த இருவருமாவர்.

சம்பவம் குறித்து ஜெயக்குமார் கூறியதாவது;

குளப்பிட்டிச் சந்தியில் நாங்கள் காவற்கடமையில் இருந்தோம் வெள்ளி இரவு 11 மணியளவில் மூன்று வாகனங்கள் வந்தன. நாங்கள் வாகனங்களை மறித்தோம்.

வாகனங்களில் இந்திய இராணுவத்தினரும் இன்னும் இளைஞர்கள் சிலரும் இருந்தனர்.

அந்த இளைஞர்கள் இறங்கி வந்து எம்மிடம் இருந்த 'கிரனேட்'டைப் பறித்து எடுத்துக் கொண்டு எம்மைத் தாக்கினர் இந்தச் சம்பவத்தை இந்திய இராணுவத்தினர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

... எங்களில் ... கண்களைக் கட்டி வானில் குப்புறப் படுக்கவைத்துக்கொண்டு பல மணி நேரமாக வானில் கொண்டு சென்றனர் அப்போது பின்னால் இராணுவ டிரக் வரும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

பின் அடுத்த நாள் காலை ஒரிடத்தில் நாங்கள் தடுத்து வைக்கப்பட்டோம். எந்த இடம் என்று எம்மால் கூறமுடியாது

அங்கு நாம் பலமுறை தாக்கப்பட்டோம் சித்திரவதை செய்தும் பல கேள்விகளைக் கேட்டார்கள்.

அங்கு வந்த இந்திய இராணுவத்தினர் எங்களை 'கிரனெட்'டைக் கையில் கொடுத்து படம் எடுத்துக்கொண்டனர்.

எம்மை அங்கிருந்து இந்தியஇராணுவத்தினர் டிரக்கில் கொண்டுவந்து கோட்டையில் ஒப்படைத்தனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

அந்தோனிப்பிள்ளை இலங்கராசா, சபாபதிப்பிள்ளை பரன் என்பவர்கள் தாம் கோப்பாயில் இரவுக் காவலில் ஈடுபட்டிருந்தபோது இந்திய இராணுவத்தினரோடு வந்த சிலரால் தாக்கப்பட்டதாகக் கூறினர்.

அதிலிருந்து தாம் ஒருவாறு தப்பிச் சென்றதாகவும் அவர்கள் கூறினர்.

## குடாநாடு---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

...யல் கைதிகளையும் விடுவிக்குமாறு வற்புறுத்துதல்

* கிழக்கில் நடக்கும் இனஒழிப்பு நடவடிக்கைகளுக்கும், சிங்களக் குடியேற்றங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துதல்.

* தமிழர் தாயகத்திலிருந்து ஸ்ரீ லங்கா இராணுவத்தையும், ஸ்ரீ லங்கா பொலீஸ் நிர்வாகத்தையும் அகற்றுமாறு வற்புறுத்துதல்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷனல் (பிறைவேற்) லிமிட்டெட் ... 292/2, ... 07-09-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Monday, September 07-1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org